25.04.2013

# உதய சூரியன்

*Source for reading hunters*


களம் - 01. சூரியன் -34 பக்கம் :32 விலை: 20/=



## 3 உயிர்களை காவு கொண்ட மது

## நான் தோற்று விட்டேன் அம்மா

## கேள்விக்குறியாகும் வடக்குத் தேர்தல்?



# எரிக்கப்பட்ட ஆவணங்கள்

# உண்மையை வெளிக்கொண்டு வருமா?

## காத்திருக்கும் மக்கள்

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் கீழ் இயங்குகின்ற நகரசபைகளில் வவுனியா நகரசபையும் ஒன்றாகும். இந் நகரசபையில் பல்வேறு குழப்பங்களும், ஊழல்களும் இடம்பெறுவதாக நகரசபையின் எல்லைக்குட்பட்ட மக்கள் கூறிவருகின்ற நிலையில் பாதுகாப்பாக பேணப்பட வேண்டிய ஆவணங்கள் நகரசபையினரால் தீயிடப்பட்ட சம்பவம் ஒன்று இடம் பெற்றுள்ளது. இது அப்பகுதி மக்களிடையே பலத்த சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளன.

வவுனியா நகரசபைக் கூட்டம் இடம்பெறுகின்ற போது நகரசபை உறுப்பினர்கள் வரவுப் பதிவேடு உள்ளிட்ட சில ஆவணங்களில் கையெழுத்திடுவது வழக்கம். இவ்வாறு கையெழுத்திடுகின்ற ஆவணங்கள் கூட்ட அறிக்கையுடன் இணைத்து உள்ளூராட்சி சபையுடன் தொடர்புடைய உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைக்கப்படுகின்ற அதேவேளை, அவை ஆவணங்களாகவும் பேணப்படுவது வழக்கம். இது சபை நடவடிக்கைகளுக்கு அவசியமானது ஆகும்.

ஆனால், இவ்வாறு பேணப்பட வேண்டிய ஆவணங்கள் சில பொறுப்புவாய்ந்த அதிகாரிகளின் துணையுடன் எரியூட்டப்பட்டுள்ளது. இது தொடர்பாக சபைக்கும் நிர்வாகத்திற்கும் தெரியப்படுத்திய போதும் இதுவரை எந்தவொரு நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. இதனால் இவ் ஆவணங்கள் திட்டமிட்டே




எரியூட்டப்பட்டுள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

இவ் விடயம் தொடர்பாக வவுனியா நகரப் பகுதியில் வசிக்கும் எஸ்.சசிகரன் என்பவரை தொடர்பு கொண்டு கேட்டபோது, ''எங்கட நகரசபையில கணக்கா பிரச்சனைகள் நடக்குது. உயர் அதிகாரிகளிட்ட சொல்லியும் இதுவரை எதுவுமே நடக்கல. இப்ப இந்த ஆவணங்களை எரிச்ச விசயம் வந்திருக்கு இனியாவது ஏதாவது நடவடிக்கை எடுக்கிறாங்களா என்று பார்ப்பம்'' என்றார்.


நகரசபையின் இச் செயற்பாடுகள் தொடர்பாக நகரசபை மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும் என பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக ஆர்.தனபாலசிங்கம் என்பவர் கூறுகையில், ''நகரசபையில் இருந்து சுரேன் என்ற உறுப்பினரை இடைநிறுத்துவதற்கான முயற்சிகள் சபையாலும் சில அரசியல் பிரமுகர்களாலும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதால அவர் கூட்டத்திற்கு வாறேல என்பதை காட்டுவதற்கு அவருடைய சைனுடன் இருக்கும் ஆவணங்கள் எரியூட்டப்பட்டுள்ளன. இதை யாரைட்ட சொல்லிற. எல்லாருக்கும் பங்கு இருக்கிறதால சொல்லியும் ஒன்றும் நடக்கப் போறதில்ல'' என்றார்.

நகரசபையில் இருந்து சபையாலும் நிர்வாகத்தாலும் வெளியேற்றப்பட்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நகரசபை உறுப்பினர் எஸ்.எஸ்.சுரேன் அவர்களிடம் கேட்ட போது, நான் சில தவறுகளை தட்டி கேட்டதால என்னை வெளில விட முயற்சி செய்தார்கள். ஆனால் என்னில பிழை இல்லை என்றதால கோட்ஸ்சில கேஸ் போட்டிருக்கிறேன். எனக்கு சாதகமா தான் தீர்ப்பு வரும். அதால நான் கூட்டங்களுக்கு வாறேல எனக் காட்ட இதை எரிச்சிருக்கலாம்'' எனத் தெரிவித்ததுடன் வேற கொப்பியும் சைன் வைக்க வைத்திருக்கிறார்களாம் எனவும் தெரிவித்தார்.

இவ்வாறு நகரசபையில் இடம் பெற்ற சம்பவம் தொடர்பாக வவுனியா நகரசபைத் தலைவர் ஜ.கனகையாவை தொடர்பு கொண்ட போது, ''ஆவணங்கள் எரிக்கப்பட்டதா? எப்ப நடந்தது? இது பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது நாங்கள் கையொப்பம் வைக்கிற கொப்பி உங்க தான் இருக்கு'' என பொறுப்பற்ற விதத்தில் பதிலளித்தார்.

இவ்வாறு நகரசபை தலைவரும் உறுப்பினர்களும் பொறுப்பற்ற விதத்தில்



செயற்படுகின்றமை மக்களிடையே அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. நகரசபை நிர்வாகம் ஆவது பொறுப்புடன் செயற்படும் என்ற நம்பிக்கையில் நகரசபைச் செயலாளர் வசந்தகுமாரை தொடர்பு கொண்ட போது, இவ்வாறு எரிந்த நிலையில் இருக்கிறது சபை உறுப்பினர்களின் உண்மையான கையொப்பம் தான். இதுன்ர கொப்பி எங்கட்ட இருக்கு. ஆனால் இது எப்படி வெளில போனது என்று விசாரிக்கிறேன். இதை யார் எரிச்ச என்று கண்டுபிடிக்கப்பட்டால் அவருடைய வேலை போற விசயம். அதால மெதுவா தான் பார்க்கணும். இது பிழையான வேலை தான் என்றதுடன் ஆவணங்களை பாதுகாக்கும் உத்தியோகத்தரை விசாரிக்கிறேன் என்றார்.

மெதுவாக எப்ப விசாரித்து முடிப்பார்களோ? தெரியல என மக்கள் தெரிவிக்கின்றனர். எனவே நகரசபை நிர்வாகமும் சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளும் இது தொடர்பாக கவனம் செலுத்தி உண்மையை வெளிக் கொண்டு வருவார்களா?

-கே.வாசு-

# ஜாதிக் கலவரங்களும் திருவிழாக்களும்

**ப**ங்குனி மாதம் தொடங்கி விட்டாலே நமது தேயிலை தோட்டங்களில் மாரியம்மன் திருவிழா களைகட்டிவிடும். தெய்வ நம்பிக்கை அல்லது தெய்வ வழிபாடு என்பதையெல்லாம் தாண்டி இந்தத் திருவிழாக்களில் நமது தொழிலாளர்களுக்கே உரிய பல்வேறு நுட்பங்களும் அடையாளங்களும் பொதிந்துதான் கிடக்கின்றது. "கரகம் பாலித்தல்" என்ற அம்சம் தொடங்கி இறுதியாக "குடி விடுதல்" என்ற அம்சம் வரை இந்தத் திருவிழாக்களில் பொதிந்து கிடக்கும் சுவாரஸ்யங்களும் அற்புதங்களும் அநேகம்.

இப்படியாக மெச்சிக் கொள்ளத்தக்க அம்சங்கள் அதிகம் இருந்தாலும் கரகம் பாலித்தல் அம்சத்திலிருந்தே சாதிய அடையாளங்களை பிரதிபலிக்கக் கூடிய நகர்வுகள் இந்த திருவிழாக்களில் அல்லது இந்த மக்களிடத்தில் காணப்படத்தான் செய்கின்றன. பெரும்பாலான தோட்டங்களில் இந்த நடை முறை கண்கூடு. விடயம் என்னவென்றால் அநேக தோட்டங்களில் இந்த விடயம் தெரிந்தும் தெரியாதது போல், அல்லது கண்டுகொள்ளப்படாமல் அல்லது ஒரு சகிப்புத் தன்மை நிறைந்த மனநிலையோடு நடந்து முடிந்து விடுகிறது.



சில இடங்களில் அது பாரிய வன்முறையாக வெடித்து விடுகிறது. இப்படித்தான் அண்மையில் மஸ்கெலியா பிரதேச தோட்டமொன்றில் மாரியம்மன் திருவிழாவின் போது மூண்ட ஜாதிக் கலவரத்தினால் அந்தத் தோட்டம் மட்டுமன்றி அயலிலுள்ள தோட்டங்கள் கூட ஆடிப்போயிருக்கிறது.

சம்பவம் இதுதான். கரகம் பாலித்த பின் கரகங்களை தூக்குவதற்காக வந்த ஆட்களில் "சக்தி கரகத்தை" தூக்கியவர் தாழ்ந்த சாதியைச் சேர்ந்த ஒருவர். இங்குதான் முரண்பாடு ஆரம்பித்திருக்கிறது. குறிப்பாக அநேக தோட்டங்களில் இந்த "சக்தி கரகத்தை" தூக்குவதற்கான ஆளை அழைக்கும் போது உயர் சாதியைச் சேர்ந்த ஒருவரை திட்டமிட்டே அழைத்துக் கொள்வார்கள். குறித்த மஸ்கெலிய பிரதேச தோட்டத்தில் அது மாறி நடக்க கொஞ்சம் கொஞ்சமாக வாய்த் தர்க்கங்களோடு நடந்து கொண்டிருந்த சண்டை ஒரு கட்டத்தில் கை கலப்பாக மாறி இறுதியில் வெட்டுக்குத்தோடு முடிந்திருக்கிறது.

இறுதியில் சிலர் நாவலப்பிட்டி வைத்தியசாலையிலும் சிலர் கண்டி வைத்தியசாலையிலும் இன்னும் சிலர் பொலிஸ் சிறைகளுக்குள்ளும் இருக்கிறார்கள். திருவிழா முடிந்து விட்டது. எல்லாமே ஓய்ந்த விட்டது. ஆனால் வைத்தியசாலைகளிலும் பொலிஸ் சிறைகளிலும் இருப்பவர்களும் அவர்களின் குடும்பங்களும் தமது அன்றாட வாழ்க்கையை இழந்து வருமானத்தை இழந்து இன்று தவித்துக் கொண்டிருக்கிறார்கள். யாருடைய ஜாதியும் யாருக்கும் உதவப்போவதில்லை. ஜாதி என்ற அடையாளம் என்பது இன்றோ நேற்றோ இரண்டு மூன்று தலைமுறைகளுக்கோ உரியதல்ல.

ஆக இந்த ஜாதிய அடையாளங்கள் மனிதருக்குள் தோன்றிய காலம் தொட்டே ஜாதிகளுக்கிடையிலான முரண்பாடுகள் இருந்து கொண்டு இருக்கிறது.

ஆக நம் ரத்தத்தோடு ஊறிவிட்ட ஒரு விடயத்திற்கு ஒரு திருவிழாவில் தீர்வு கிடைத்துவிடுமா என்ன?

தவிர ஜாதிய அடையாளமும் அது மீதான பற்றும் தமிழ்நாடு, யாழ்ப்பாண சமூகங்களோடு ஒப்பிடுகையில் மலையக சமூகத்தில் மிகக் குறைவான ஒன்றாகவே காணப்படுகிறது.

இருப்பினும் ஆங்காங்கு அவ்வப்போது இப்படியான வன்முறைகளும் இடம்பெற்றுக் கொண்டுதான் இருக்கின்றன.

உண்மையில் இது தவிர்க்கப்பட வேண்டியதும் நம்மிலிருந்து களையப்பட வேண்டியதுமான ஒரு அம்சமாகும்.

"கேளடா மாணிடவா எம்மில்
கிழோர் மேலோர் இல்லை"

ஜாதிப்பிரிவுகள் வேண்டாம்
அன்பு தன்னில் செழித்திடும் வையம்.

**வசுமதி**

**பயிற்றப்பட்ட / பயிற்றப்படாத வீட்டுத் தாதிமார்கள் தேவை (கொழும்பு)**

**தகைமை :**
ஆண்டு 10 க்கு மேல் கல்வி கற்றிருத்தல் விரும்பத்தக்கது.

**உணவு, தங்குமிட வசதிகளுடன் மாத வருமானம் ரூ.10,000 - 18,000/-**

தொடர்பு : We Care Home Nursing
T.P : 011 3053293, 0777568349

# எங்கே நிம்மதி

வாழ்க்கைக்கு வழிசொல்லும் விழிப்புணர்வுத் தொடர் 32



ஒரு தாவோ கதை.

பண்டைய சீன நாட்டில் ஒரு சிறிய நகரத்தில் ஒரு கொல்லன் வாழ்ந்து வந்தான். அவன் வீட்டின் முன் பகுதியிலேயே அவன் தொழில் செய்யும் கடையை வைத்திருந்தான்.

தன் வாழ்க்கையை நடத்த காலை முதல் இரவு வரை அவன் வியர்வை சிந்தி உழைக்க வேண்டி இருந்தது. கடையின் முன்னால் ஒரு மேசையில் ஒரு அழகான பழைய தேநீர் தயாரிக்கும் சட்டியில் நீரை நிரப்பி வைத்திருப்பான். அதன் அருகே ஒரு நாற்காலியும் வைத்திருப்பான். தாகம் எடுக்கும் போதெல்லாம் எழுந்து முன்னால் வந்து அந்த நாற்காலியில் அமர்ந்து அந்த தேநீர் சட்டியில் இருந்து குளிர்ச்சியான நீரைக் குடித்து கண்களை மூடிக்கொண்டு சிறிது நேரம் இளைப்பாறுவான். அவன் மிக அமைதியாக உணரும் தருணங்கள் அவை.

ஒரு நாள் அவன் அப்படி அந்த தேநீர் சட்டியில் இருந்து தண்ணீரைக் குடித்துக் கொண்டிருக்கையில் ஒரு வழிப்போக்கன் அதை பார்த்து விட்டு ஐயா உங்களின் தேநீர் சட்டி மிக வித்தியாசமாக இருக்கிறது.

அதற்கு கொல்லன் இது என் தந்தைகாலத்து சட்டி என்றார்.

வழிப்போக்கன் 'அதை நான் சற்று ஆராய்ந்து பார்க்கலாமா?' என்று கேட்டான் அந்த வழிப்போக்கன்.

இந்த பழைய சட்டியை ஆராய என்ன இருக்கிறது என்று நினைத்தவனாக கொல்லன் அந்த தேநீர் சட்டியை அந்த வழிப்போக்கனிடம் தந்தான். வழிப்போக்கன் அந்த தேநீர் சட்டியைக் கையில் பிடித்து அதனை கூர்மையாக ஆராய்ந்து பார்த்தான்.

பின் சொன்னான். ஐயா, இந்த தேநீர் சட்டி வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த ஒரு புராதனப் பொருள்.

இவர்கள் பேசிக் கொண்டிருக்கும் வேளையில் அக்கம் பக்கம் உள்ளவர்கள் எல்லாம் அங்கு கூடி விட்டார்கள்.

வழிப்போக்கன் சொன்னான். இதற்கு முந்தைய மன்னர் பரம்பரையினர் காலத்தில் இதுபோன்ற ஒரே மாதிரியான மூன்று தேநீர் சட்டிகள் பிரத்தியேகமாக தயாரிக்கப்பட்டன. இரண்டு தேநீர் சட்டிகள் இன்றும் நம் அரசவையில் இருக்கிறது.

மூன்றாவது தொலைந்துபோய் விட்டதாகக் கருதப்பட்டு வந்தது. இதைப் பார்த்த பின்பு தான் இது இன்னமும் இருப்பது புரிந்தது. இந்த சட்டியை நன்றாகக் கழுவி சுத்தம் செய்து பார்த்தால் இதன் அடியில் முந்தைய அரசகுல முத்திரை இருப்பதை நீங்கள் பார்க்கலாம்.

இதைக் கேட்ட அனைவருக்கும் ஒரு பரபரப்பு ஏற்பட்டு விட்டது என்றே சொல்ல வேண்டும். உடனடியாக கொல்லன் அந்த சட்டியை நன்றாகக் கழுவி சுத்தம் செய்தான். பின் பார்த்த போது வழிப்போக்கன் சொன்னது போல அந்த சட்டியின் அடியில் முந்தைய அரசகுல முத்திரை இருந்தது. இதுவரை யாரும் அப்படிப்பட்ட முத்திரை உள்ள பாண்டங்களைப் பார்த்ததில்லை.

வழிப்போக்கன் கேட்டான். ஐயா இந்த அபூர்வ சட்டியை நீங்கள் விற்க விரும்பினால் நானே வாங்கிக் கொள்கிறேன். நூறு பொற்காசுகள் வரை தர நான் தயாராக இருக்கிறேன்.

கொல்லனுக்குத் தன் காதுகளை நம்ப முடியவில்லை. அக்காலத்தில் நூறு பொற்காசுகள் என்பது மிகப் பெரிய செல்வம். கொல்லன் தன் வாழ்நாள் எல்லாம் கடுமையாக உழைத்தாலும் அந்த அளவு செல்வத்தை சம்பாதிக்க முடியாது. கொல்லன் சம்மதித்தான்.

வழிப்போக்கன் இன்னும் சில நாட்களில் பொற்காசு களுடன் வருவதாக சொல்லிச் சென்றுவிட்டான்.

கூடியிருந்தவர்களுக்கும் நடந்ததெல்லாம் மிக ஆச்சரியமாக இருந்தது. ஒவ்வொருவரும் அந்த தேநீர் சட்டியைக் கையில் எடுத்துப் பார்க்க விரும்பினார்கள். சட்டியின் மதிப்பை இப்போது உணர்ந்திருந்த கொல்லன் எல்லோரையும் எட்ட நின்றே பார்க்கச் சொன்னான்.

அன்றிலிருந்து அவன் வாழ்க்கையில் எல்லாமே மாறிவிட்டது. அந்த தேநீர் சட்டியை முன்பு போல வெளியே வைப்பதில்லை வீட்டுக் குள் வைத்தான். வேலை முடிந்த பின் முன்பு போல நிம்மதியாக வெளியில் காற்றாட அமர்ந்து குளிர்ந்த நீரை அந்த சட்டியில் குடிக்க முடியவில்லை. உள்ளே அமர்ந்து குடித்ததால் புழுக்கமாக இருந்தது. அந்த சட்டியைத் தூக்கி அப்படியே அதிலிருந்து தண்ணீரைக் குடிக்க முடியவில்லை. சட்டியை உயரத் தூக்கும்போது கை தவறி விழுந்து உடைந்து விடுமோ என்ற பயம் வந்தது.

ஊர் மக்கள் இந்தக் கொல்லன் எப்படிப்பட்ட அதிர்ஷ்டக்காரன் என்று அவர்கள் அவன் முன்னாலேயே வியந்தார்கள்.

இந்த சட்டியை கவனிப்பதே கொல்லனின் முழு நேரப் பணியாகிவிட்டது. சட்டியை யாரும் திருடிவிடு வார்களோ என்று இரவும் பகலும் கண்விழித்து காப்பாற் றினான். அவனுடைய வழமையான வேலைகள் எதுவும் சரியாக நடக்கவில்லை. மனதில் நிம்மதியில்லாமல் தவித்தான். இப்படியே நாட்கள் சென்றன. சில நாட்களில் வருவதாகச் சொன்ன வழிப்போக்கன் மூன்று மாத காலமாகியும் வரவில்லை.

ஆனால், ஆட்களோ அந்த தேநீர் சட்டியைப் பார்க்க வந்த வண்ணம் இருந்தார்கள். ஒரு நாள் வெளியூர்களில் இருந்தும் ஆட்கள் அதனைப் பார்க்க வந்து விட்டார்கள். அவனிடம் நீ உண்மையிலேயே பெரிய அதிர்ஷ்டசாலி தான் என்றார்கள்.

அவனோ பொறுக்க முடியாமல் சொன்னான். உண்மையில் நான் துரதிர்ஷ்டசாலி தான். ஒரு காலத்தில் எளிமையான வாழ்க்கை வாழ்ந்தபடி நிம்மதியாக நான் இருந்தேன். இந்த மூன்று மாதங்களாக இந்த தேநீர் சட்டி என் நிம்மதியைக் குலைத்து விட்டது.

பகலில் நிம்மதியாக வெளியே உட்கார்ந்து இதில் தண்ணீரைக் குடிக்க முடியவில்லை. ஒரு கணம் கூட என்னால் நிம்மதியாக வேலை பார்க்க முடியவில்லை. இதை யாராவது திருடிச் சென்று விடுவார்களா என்ற பயத்தில் இரவிலும் என்னால் தூங்க முடியவில்லை.

அவர்கள் சொன்னார்கள்.

அப்படிச் சொல்ல வேண்டாம். அந்த வழிப்போக்கன் கண்டிப்பாக வருவான். அதை விற்று நூறு பொற்காசுகளோடு நீ நிம்மதியாக இருக்கலாம்

அவன் சொன்னான். இத்தனை நாட்கள் வராதவன் இனி வருவானா என்று எனக்குத் தெரியவில்லை. எனக்கு இப்போது நூறு பொற்காசுகள் தேவையில்லை. என் பழைய நிம்மதியான வாழ்க்கை திரும்பக் கிடைத்தால் போதும் என்று ஒரே போடாக சட் டியைப் போட்டுடைத்தான். அந்த தேநீர் சட்டி பல துண்டு களாக சிதறியது. மற்றவர்கள் திகைத்துப் போய் நிற்க கொல்லனோ மாபெரும் நிம்மதியை உணர்ந்தான்.

இந்தக் கதையில் கொல்லன் முன்பு வாழ்ந்த வாழ்க்கை எளிமையானதாக இருந்தது. அவனுக்குக் கிடைத்த வருமானம் அவன் வாழ்க்கை நடத்தப் போதுமானதாக இருந்தது.

இந்த தாவோ கதை செல்வமும், புகழும் அதிகரிக்கும்போது அதனுடன் கூடவே வரும் பிரச்சினைகளைச் சொல்கிறது. அவனுடைய கடைசி முடிவு மிகப் பெரிய முட்டாள்தனமாகப் பலருக்கும் தோன்றலாம்.

இக்கதை செல்வம், புகழ் ஆகியவற்றிற்கு எதிர்ப்பு தெரிவிப்பதாகத் தோன்றலாம். ஆனால் உண்மையில் இது ஆழமாகத் தெரிவிக்கும் செய்தி வேறு.

என்றுமே மனிதனை விட அதிகமாக அவனுடைய செல்வமும், புகழும் முக்கியத்துவம் பெற்று விடுமானால் அவனால் உண்மையான நிம்மதியைக் காண முடியாது.

பிரச்சினை செல்வத்திலும், புகழிலும் இல்லை. உண்மையான பிரச்சினை அவனால் அவற்றை விட்டு இருக்க முடியாத அடிமைத்தனத்தில் தான் இருக்கிறது. இந்த அடிமைத்தனம் அவனை சின்ன சின்ன எளிமையான சந்தோஷங்களை அனுபவிக்க அனுமதிக்காது.


## வெற்றிக்கு ஆசை

வெற்றியை எதற்காக விரும்புகிறீர்கள்? அது உற்சாகம் தரும் என்று தானே? கூடவே, வெற்றியை அடையத் தேர்ந்தெடுக்கும் பாதையும் உற்சாகமாக அமைந்து விட்டால்... வெற்றியின் உற்சாகத்தை வெற்றி அடையும் முன்னரே அனுபவிக்கலாம் அல்லவா! குறுக்கு வழிக்கு ஆசைப்பட்டு அதை ஏன் இழக்கப் பார்க்கிறீர்கள்?



வெற்றியின் உண்மையான அர்த்தத்தைப் புரிந்து கொள்ளாதவர்கள் தான் குறுக்கு வழியில் வெற்றிக்கு ஆசைப் படுகிறார்கள்.

# ஹேயிஸ் தோட்ட இளைஞர் மீது தோட்ட அதிகாரி உட்பட பெரும்பான்மையின இளைஞர்கள் தாக்குதல்



கொலன்ன பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ஹேயிஸ் தோட்ட முச்சக்கரவண்டி சாரதியான இளைஞர் ஒருவர் மீது தோட்ட அதிகாரி உட்பட இரு பெரும்பான்மையின இளைஞர்கள் தாக்குதல் மேற்கொண்டதன் காரணமாக பலத்த காயமடைந்த குறிப்பிட்ட இளைஞன் ஆபத்தான நிலையில் கொலன்ன வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறிப்பிட்ட தோட்டத்து இளைஞன் தமது முச்சக்கர வண்டியை ஹேயிஸ் தோட்டத்துக்குச் செல்லும் சந்தியில் உள்ள முச்சக்கர வண்டி தரிப்பிடத்தில் நிறுத்தி வாடகைக்கு சென்றமையே தாக்குதலுக்குக் காரணமாக அமைந்திருக்கிறது.

அதாவது தோட்ட இளைஞனை குறிப்பிட்ட முச்சக்கரவண்டி தரிப்பிடத்தில் நிறுத்தி ஓட்டவேண்டாம் என்று குறிப்பிட்டே தாக்கப்பட்டதாக தெரியவருகிறது. குறிப்பிட்ட தோட்ட அதிகாரியுடன் முச்சக்கர வண்டி சாரதி ஒருவரும் முன்னாள் முச்சக்கர வண்டி சாரதி ஒருவரும் தற்போதைய தோட்ட அதிகாரியின் சாரதியும் இணைந்தே இத்தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்.

இவ்விடயம் சம்பந்தமாக மாகாணசபை வேட்பாளர் ரூபன் பெருமாளின் கவனத்திற்கு கொண்டு வந்ததையடுத்து ரூபன் பெருமாள் மேற்கொண்ட துரித நடவடிக்கையின் பயனாக இருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், மேலும் மோதல் சம்பவம் எதுவும் இடம்பெறலாம் என்ற காரணத்தினால் குறிப்பிட்ட தோட்டத்திற்கு பொலிஸ் பாதுகாப்பும் பெற்றுக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

மேற்குறித்த சம்பவம் தொடர்பாக மாகாணசபை வேட்பாளர் ரூபன் பெருமாளினால் பிரதி அமைச்சர் முத்துசிவலிங்கம் மற்றும் சப்ரகமுவ மாகாண பிரதி பொலிஸ் மா அதிபர் ஆகியோரின் கவனத்திற்கும் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

இவ்விடயம் சம்பந்தமாக ரூபன் பெருமாள் கருத்துத் தெரிவிக்கும் போது,

இதற்கு முன்னரும் கொலஸ்வில, வெல்லவல, வலவ்வ போன்ற பகுதிகளில் இவ்வாறு தோட்ட இளைஞர்கள் தாக்கப்பட்டுள்ளனர். அத்தோடு இந்த சம்பவத்திற்குப் பின்னரும் இரண்டு இளைஞர்கள் கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளனர். ஆகவே, இவ் விடயம் தொடர்ந்தும் நடைபெறாதிருக்க அமைச்சர் ஆறுமுகன் தொண்டமானின் கவனத்திற்கு கொண்டுவருவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்போவதாகவும் தெரிவித்தார்.

**எஸ்.சந்திரமோகன்**

## பயோ Data by உதயசூரியன்



பெயர் :- ஜீ.எல்.பீரிஸ்

பதவி :- வெளிவிவகார அமைச்சர்

தொழில் :- கடன் கேட்டு நாட்டுக்கு நாடு பவனி செல்வது

**முக்கிய சிறப்பம்சம் :-**

ஆளும் கட்சி பக்கம் பாய்ந்து எப்படியாவது முக்கிய அமைச்சை பெற்றுக் கொள்வது. (ஹி...ஹி... மலையக தலைவர்களை போலவா?)

**நண்பர்கள் :-**

சுப்ரமணிய சுவாமி போ ல மஹிந்த அரசின் மீது காதல் கொண்டவர்கள்

**எதிரிகள் :-**

அரசிற்கு எதிராக புலம் பெயர்ந்தவர்களை தூண்டிவிடும் அந்த(?) கூட்டமைப்பினர்.

**பிடித்த விடயம் :-**

வெளிநாடுகளில் மஹிந்த அரசிற்கு நன்மதிப்பை ஏற்படுத்த வக்காலத்து வாங்குவதே (அது தான் ஜெனீவா தீர்மானம் தோல்வியடைந்ததோ?).

**பிடிக்காத விடயம் :-**

வடக்கு தேர்தலை நடத்த கூறி த.தே. கூட்டமைப்பு அரசை நச்சரிப்பது,( இப்போது என்ன அவசரம் )

**ஜெனீவா தீர்மானம் தொடர்பாக :-**

குரைக்கிற நாய் கடிக்காது அதுபற்றி அலட்டிக் கொள்ள தேவையில்லை.

**ஐ. தே. கட்சியின் நிலை :-**

கைப்புண்ணுக்கு கண்ணாடி வேண்டுமா?

**அரசின் தற்போதைய நிலை :-**

பனங்காட்டு நரி சலசலப்புக்கு அஞ்சாது.

[யாவும் கற்பனை]

**எம். தாசன்-**




## கண்ணாமூச்சி



பொருத்தமான முகத்தைக் கண்டுபிடியுங்கள்



a பிரணிதா




b தமன்னா




c காஜல் அகர்வால்

## சூப்பர் ரூப்பர்



01 02 03 04



இந்தப் படத்திற்குப் பொருத்தமான கண்கள் எவை?

## யாரது



* இவர் தமிழ்த் திரைப்பட நடிகையும் நாடகக் கலைஞரும் ஆவார்.
* இவர் ஏறத்தாழ 70 தொலைக்காட்சி நாடகங்களில் முக்கிய கதாபாத்திரமாகவும், சில திரைப்படங்களிலும் நடித்துள்ளார்.
* இவரது சிறந்த நடிப்பிற்காக 2007 ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசு இவருக்கு கலைமாமணி விருது வழங்கிச் சிறப்பித்தது.
* இவர் திரைப்பட நடிகைகளுக்கு பின்னனிக் குரல் கொடுத்துள்ளார்.
* இவர் பாசமலர்கள் திரைப்படத்தில் குழந்தை நட்சத்திரமாகத் தோன்றினார்.

இவர் யார்?




படத்தைப் பார்த்து விடையைச் சொல்லுங்கள் பார்க்கலாம்...

1. இது எந்தத் திரைப்படத்தின் காட்சி ?

### சிந்தனைத் துளி

"உலகில் யாரும் தெய்வீகக் குணங்களுடன் பிறப்பது இல்லை. ஒவ்வொருவருக்கும் அவரவர் மேற்கொள்ளும் முயற்சிகளைப் பொறுத்துதான் முன்னேற்றமோ வீழ்ச்சியோ ஏற்படுகிறது"

# வார்த்தைப் புதிர் - 56



### இடமிருந்து வலம்

01. பெண்கள் விரும்பும் பூ. 03. இது மலரும்
06. கண்ணகி என்றால் நினைவுக்கு வருவது.
07. உலக நாயகன். 09. பூமி என்பதன் ஒத்த சொல்.
11. இது வரும்போது பணிவு வரவேண்டும்.
14. 12 கொண்டது ஒரு----. 16. இது ஒட்ட உதவும். (ஆங்கிலச் சொல்)
20. உடலில் உள்ள ஓர் உறுப்பு.
21. இது அறியாமல் இருப்பது நல்லது.
23. தேங்காய் வெட்டும், தலையையும் வெட்டும்.
24. துவாய் என்றும் சொல்லலாம்.
26. பெட்டி அல்லது அடைப்பு என்பது. 28. கடிகார சத்தம். 29. வார நாட்களில் ஒன்று. 33. அவன் அல்ல.

### வலமிருந்து இடம்

19. யானையை அடக்க பயன்படுவது.
30. நம்மை நமக்கு காட்டுவது.
32. முட்டி மோதிக் கொள்ளும் சண்டை.

(குழம்பியிருக்கிறது)

### மேலிருந்து கீழ்

01. பச்சை நிறத்தில் இருக்கும் ரத்தின கல்.
02. கொடி ஏற்ற பயன்படுவது.
13. கையில் பத்து, காலில் பத்து இருப்பது.
15. இவர்கள் இந்தியாவில் வாழும் ஒரு இன மக்கள்.
16. அநியாய வட்டி. 17. குதிரை மேல் பயணிப்பது.
20. உடல் உறுப்புகளின் ஒன்று.
21. கற்பூரம். 22. விலங்குகளுக்கு இருப்பது.
23. பயம் 25. ஜனங்கள்.
27. தொலைபேசியில் இலக்கங்களை அழுத்துவது ஆங்கிலத்தில்.

### கீழிருந்து மேல்

05. முடி. 08. இது நடனமாடும் பறவை.
10. வாயால் ஊதுவது. 12. காதல்தேசம் கதாநாயகி. 18. வயிற்றில் இருப்பது. 19. பாசம்.
26. இது போதை தரும். 31. எலி வளையானாலும்... வளை வேண்டும். 33. ரூபாய்க்கு முந்தைய நாணயம் (இந்தியாவில்). 34. வாகனம்.



# 3 உயிர்களை காவு கொண்ட மது

மகிழ்ச்சிக்காக மது குடிக்கிறேன் என்பார்கள் பொதுவாக. ஆனால் மன மகிழ்ச்சி என்ற ரூபத்தில் ஆரம்பத்தில் நுழையும் மது, அதை அருந்துபவரின் மகிழ்ச்சியை மட்டுமல்ல அவர் சார்ந்த அத்தனை பேரின் மகிழ்ச்சியையும் நிம்மதியையும் ஒட்டு மொத்தமாகக் காவு வாங்கிவிடும்.

புசல்லாவை நகரை பிறப்பிடமாகக் கொண்ட நயனாவின் குடும்பத்தையும் மது இப்படித்தான் காவு வாங்கிக் கொண்டது.

புசல்லாவை நகரை பிறப்பிடமாகக் கொண்டவள் நயனா தமயந்திக்குமாரி. நயனாவோடு உடன் பிறந்த சகோதரர்கள் நான்குபேர். நயனாவின் அப்பா, அம்மா சாதாரண தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள். அத்தோடு நயனாவின் பெரியம்மா, சித்தி ஆகியோரின் வீடுகளும் பக்கத்திலேயே இருந்தன.

நயனாவின் பெரியம்மாவின் மகன் அஜித் என்பவன் நயனா வீட்டில்தான் சிறுவயதில் இருந்தே வளர்ந்தான். அவனோடுதான் நயனா பாடசாலைக்கு செல்வது வழக்கம்.



வீட்டாரும் இவர்கள் அண்ணன் தங்கைதானே என்று சாதாரணமாக விட்டுவிட்டார்கள். காலப்போக்கில் இவர்களின் சகோதர உறவு காதலாக மாறியது.

அஜித்தால் தொடர்ந்து படிக்க முடியவில்லை. படிப்பிலும் அவனுக்கு பெரியளவில் ஈடுபாடு இல்லை அதனால் பாடசாலைக்கு முழுக்குப்போட்டுவிட்டு வேலைக்குச் செல்ல ஆரம்பித்துவிட்டான். ஆனால் நயனா படிப்பில் கெட்டிக்காரி. தொடர்ந்து படித்து உயர்தரத்தில் சித்திபெற்று பல்கலைக்கழகம் சென்ற நயனா, பின்னர் அப்பிரதேச பாடசாலையில் ஆங்கிலம், மற்றும் கணினி பயிற்றுவிக்கும் ஆசிரியையாக பணிபுரிந்தாள்.

அஜித் சொந்தமாக ஆட்டோ ஒன்றை வாங்கி தொழில் செய்து கொண்டிருந்தான்.

காலத்தோடு வளர்ந்த இவர்களின் காதல் வீட்டாருக்கு தெரிய வந்தது.

சகோதரர்களுக்கு இடையில் காதலா? ஊருலகம் என்ன சொல்லும் என்று அதிர்ந்து போன குடும்பத்தார் இருவரையும் பிரிக்க முயன்றார்கள்.

காதல் எந்த எல்லைக்கு வேண்டுமானாலும் போகும் என்பதை நிரூபிக்கும் வகையில் அஜித் ஒரு முடிவுக்கு வந்தான். குடும்பத்தாரை எதிர்த்து நயனாவை அழைத்துக் கொண்டு வீட்டைவிட்டு வந்தான். நுகவெல பகுதியில் வீடொன்றை வாடகைக்கு எடுத்து நயனாவோடு குடியேறினான்.

மாதங்கள் சில கடந்தன. அஜித் ஆட்டோ சாரதி என்பதால் அவனுக்கு சில நண்பர்கள் கிடைத்தார்கள். மகிழ்ச்சியை பகிர்ந்துகொள்ள அடிக்கடி நண்பர்களோடு குடிக்க ஆரம்பித்தான். சில மாதங்களில் அதுவே வாடிக்கையானது.

தினம் தினம் குடித்துவிட்டுதான் வீட்டிற்கு வருவான். நயனாவால் இதை பொறுத்துக்கொள்ள முடியவில்லை. பல முறை கண்டித்தாள். சிலசமயம் நல்லவிதமாக எடுத்துரைத்தாள். இருந்தும், அவன் எதையும் காதுகொடுத்து கேட்பதாக இல்லை.

அஜித்திடம் இந்த குடிப்பழக்கத்தை தவிர வேறு எந்த கெட்ட பழக்கமும் இல்லை. தன்னோடு வாழவந்த நயனாவை கண்ணும் கருத்துமாக பார்த்துக் கொண்டான். அதற்கு அடையாளமாக நயனா கருவுற்றாள்.

இந்த சுபச்செய்தி நயனாவின் பிறந்த வீட்டிற்குச் செல்ல நயனாவின் காதலை புரிந்துகொண்ட அவளது பெற்றோர்கள் அவளை இந்த புதுவருடத்திற்கு வீட்டுக்கு வரும்படி அழைத்தார்கள். உறவு ஒன்று சேர்ந்ததில் நயனாவிற்கு அவளவிட முடியாத மகிழ்ச்சி.

புத்தாண்டிற்கு ஊருக்கு செல்லும் போது வீட்டில் உள்ள அனைவருக்கும் ஆடைகள் வாங்கிக்கொண்டு செல்லவேண்டும் என்ற நினைத்தாள்.

மறுநாள் அஜித்தை அழைத்துக் கொண்டு கம்பளை டவுனுக்கு சென்று எல்லோருக்கும் உடைகளை வாங்கிக் கொண்டு மகிழ்ச்சியாக வீடு திரும்பினாள்.

அஜித்திடம் ''நாளை நாம் வீட்டுக்கு போகிறோம். அதனால் இன்று குடிக்காதீர்கள். வீட்டில் நம்மைப்பற்றி என்ன நினைப்பார்கள். தயவுசெய்து குடிக்கவேண்டாம்'' என்று மன்றாடி கேட்டுக்கொண்டாள்.

அன்று மாலை அஜித் வீட்டிலிருந்து வெளியே சென்றான். குடித்துவிட்டு வரவேண்டாம் என்பதை அப்போதும் நயனா நினைவுபடுத்தினாள். சரி என்று தலையாட்டிவிட்டு நான் சாப்பாடு வாங்கி வருகிறேன் என்ற சொல்லி விட்டு வெளியே சென்றான் அஜித்.

இரவு 9.00 மணியளவில் அஜித் வீட்டுக்கு வந்தான். வந்தவன் நயனாவோடு எதுவும் பேசாமல் வீட்டில் வளர்த்த நாய்க்குட்டியோடு சிறிது நேரம் விளையாடிவிட்டு கை கழுவ பாத்ரூமுக்கு சென்றான்.

அப்போது வெளியே இருந்து ஒரு சத்தம் கேட்டது ஆ...ஐயோ எரியுது ... எரியுது ஆ... என்ற அலறல் சத்தம் கேட்டு ஓடிவந்தபோது நயனா தீயில் எரிந்து கொண்டிருந்தாள். அதிர்ச்சியடைந்த அஜித் அவளை குளியலறைக்கு இழுத்துச்சென்று தண்ணீரை ஊற்றி தீயை அணைத்தான்.

உடனடியாக நயனாவை புசல்லாவை வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்றான். உண்மையில் நயனா தற்கொலை செய்து கொள்வதற்காக தீவைத்துக் கொள்ளவில்லை. அஜித்தை மிரட்ட வேண்டும் என்பதற்காகத்தான் தீவைத்துக்கொண்டான்.

விடிந்தால் புதுவருடம் பிறக்கப்போகிறது. எப்படியாவது நயனா பிழைத்துக்கொள்வாள். என்ற நம்பிக்கையில் இருந்த அஜித்திற்கு அதுவே நயனாவின் கடைசி இரவாக இருக்கப்போகிறது என்பதை அறிந்திருக்கவில்லை.

நயனாவோடு அவள் வயிற்றில் வள்ந்த கருவும் இந்த உலகைக் காணாமலேயே கருகிப்போய்விட்டது.

ஐயோ... தன்னால் இரண்டு உயிர் பறிபோய் விட்டதே என்று கதறி அழுதான். பின்பு நயனாவின் கடைசி ஆசையையாவது பூர்த்தி செய்யவேண்டும் என்பதற்காக, நயனாவின் பிணத்தோடு புதுவருடம் அன்று புசல்லாவில் உள்ள நயனாவின் வீட்டுக்கு வந்திறங்கினான்.

உறவுகள் வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கொண்டு கத்திக் கதறினார்கள். அஜித் மனதை திடப்படுத்திக்கொண்டு நயனாவிற்கு செய்யவேண்டிய கடைசிக் காரியங்களை எந்த குறையும் இன்றி செய்து முடித்தான்.


மறுநாள் அதிகாலையில் தேயிலைத் தொழிற்சாலைக்கு அருகில் உள்ள மரத்தில் தூக்கிட்டு நயனா சென்ற இடத்திற்கே சென்றுவிட்டான் அஜித். வாழவேண்டிய இந்த மூன்று உயிர்கள் கருகியதற்கு பின்னணியில் இருந்தது மது.

**ஜீ.வி.எஸ்.**

**(நன்றி: ஞாயிறு லக்பிம)**



# கேள்விக்குறியாகும் வடக்குத் தேர்தல்?



வடக்கு மாகாண சபைக்கான தேர்தல் நடக்குமா? நடக்காதா? இக்கேள்விதான் கொழும்பு மற்றும் உலக நாடுகளின் தீவிர கவனத்துக்குள்ளாகியிருக்கின்றது. வடக்கு மாகாண சபைக்கான தேர்தல் எதிர்வரும் செப்டெம்பரில் நடத்தப்படும் என்று கொழும்பு அரசாங்கம் திரும்பத் திரும்ப கூறிவருகின்ற போதிலும், அதன் விசுவாசத்தில் அவநம்பிக்கைதான் காணப்படுகின்றது. இணைந்த வடக்குகிழக்கு பிரிக்கப்பட்ட பின்னர் கிழக்கு மாகாண சபைக்கு இரண்டு தடவைகள் தேர்தல்கள் நடத்தப்பட்டுவிட்டன. வடக்கு மாகாண சபைக்கு ஒரு தடவை கூட தேர்தல் நடத்தப்படவில்லை. ஏனைய மாகாணசபைகளுக்கு அவற்றின் ஆயுட்காலம் முடிவதற்கு முன்னரே அவற்றை கலைத்து தேர்தலை நடத்தி அவற்றின் ஆட்சியைக் கைப்பற்றிய ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, வடக்கு மாகாணசபையை அவ்வாறு கைப்பற்றுவது முடியாத காரியம் என்று உணர்வதால் தான் வடக்கு தேர்தலை நடத்தாமல் இழுத்தடித்துக் கொண்டுபோகிறது என்று எதிர்த்தரப்பு வாதிக்கின்றது.

வடக்கு மாகாணசபைத் தேர்தல் நடத்தப்பட்டால் தமிழ் தேசியக் கூட்டமைப்பு அமோகமாக வெற்றிபெறும் என்பது அரசியல் அவதானிகளின் கருத்து. அரசாங்கம் தனது புலனாய்வுப் பிரிவுகள் மூலம் நடத்திய ஆய்வுகளிலும் இது தெரியவந்துள்ளது. ஏனைய எதிர்க்கட்சிகளுக்குள் பிளவை ஏற்படுத்தி அவற்றை பலவீனப்படுத்தியதுபோன்று தமிழ்த் தேசியக்கூட்டமைப்பையும் பிளவுபடுத்துவதற்கு அரச தரப்பு தன்னாலான முயற்சிகளை எல்லாம் இரகசியமான முறையில் மேற்கொண்டு வந்தது; இன்னமும் மேற்கொண்டு வருகின்றது என்பது அவதானிகளின் கருத்தாக உள்ளது.

பிளவுபடுத்தும் முயற்சிக்கு துணைபோகும் சக்திகள் தமிழர் தரப்பில் இருக்கின்றனவா என்பதை மோப்பம் பிடித்து வளைத்துப் போடும் நடவடிக் கையிலும் அரச தரப்பு இறங்கியுள்ளது என்று நம்பத் தகுந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வை வழங்கவேண்டும் என்பதில் அரசு தரப்புக்கு உண்மையான ஆர்வம் இருப்பின் வடக்கு மாகாண சபைத்தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெற்றியீட்டுவதை விரும்பும். ஆனால், வடக்கு மாகாண சபை அரசாங்கத்தின் பங்காளிக் கட்சிகளான தேசிய சுதந்திர முன்னணி மற்றும் ஜாதிக ஹெல உறுமய ஆகியன முற்றாக விரும்பவில்லை.

வடக்கு கிழக்கு மக்களின் நம்பிக்கையைப் பெற்ற கட்சியாகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை சர்வதேச சமூகம் கணித்து வைத்துள்ளது. இதனை கொழும்பு அரசாங்கத்திற்கு சர்வதேச சமூகம் பல வழிகள் மூலம் உணர்த்தியிருக்கிறது. இதன் காரணமாக வடக்குத் தேர்தல் முடிவை சர்வதேச சமூகம் உன்னிப்பாக எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது.

வடக்குத் தேர்தல் முடிவு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு சாதகமாக அமைந்தால் இனப்பிரச்சினைக்கு அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வு மூலம் நிரந்தரமானதும் நிலைத்து நிற்கக் கூடியதுமான அரசியல் தீர்வு ஒன்றை கண்டேயாக வேண்டிய நிர்ப்பந்தம் கொழும்பு அரசாங்கத்திற்கு ஏற்பட்டேயாகும் என்பது வெளிப்படை. வடக்குத் தமிழ் மக்களின் தீர்ப்பு இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு ஒன்றை வழங்குவதற்கான ஆரம்பமாக நிச்சயமாக அமையும் என்று சர்வதேச சமூகம் எதிர்பார்க்கின்றது.

அண்மையில் வடக்கு கிழக்கு மாகாணங்களில் நடத்தப்பட்ட தேர்தல்களில் எல்லாம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெற்றியீட்டி, தமிழ் மக்களின் நம்பிக்கையை பெற்ற கட்சி என்பதை நிரூபித்துள்ளது. சர்வதேச சமூகமும் அதனை ஏற்றுக் கொண்டுள்ளது. வடக்கு மாகாண சபைக்கான தேர்தல் முடிவு அரசாங்கக் கட்சிக்கு பாதகமாக அமையின் தற்போது தனது கட்டுப்பாட்டில் இருக்கும் கிழக்கு மாகாண சபையின் நிர்வாகம் கைமாறிவிடும் என்ற அச்சமும் கொழும்பு அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ளது. கிழக்கு மாகாண சபைக்கு கடந்த ஆண்டு நடைபெற்ற தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு 11 ஆசனங்களும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கு 7 ஆசனங்களும், ஐக்கிய தேசியக் கட்சிக்கு 4 ஆசனங்களும் கிடைத்தன. ஆனால், ஆட்சி அதிகாரம் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கொழும்பு அரசாங்கக் கட்சிக்கு ஆதரவாக செயற்படத் தீர்மானித்ததால் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கைகளுக்கு மாறியது.

இப்போது ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கும் இடையிலான உறவு, தென்னிலங்கையில் முஸ்லிம் மக்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்துவிடப் பட்ட பேரினவாத செயல்களால் முறிந்துபோகும் நிலைக்கு வந்துள்ளது. ஆளும் கட்சியுடனான உறவை எப்போது முறித்துக்கொள்வது என்ற நிலைக்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வந்துவிட்டதாக அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

உறவை முறித்துக்கொள்வது தொடர்பான தீர்க்கமான முடிவை எதிர்வரும் மே மாதம் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எடுக்கவிருப்பதாக அக்கட்சி தரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

உறவு முறியும் பட்சத்தில் கிழக்கு மாகாண சபை நிர்வாகம் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் கை களுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவுடன் செல்லக்கூடிய சாத்தியக்கூறுகள் தென்படுகின்றன. இப்பின்னணியில் வடக்கு மாகாண சபைக்கான தேர்தலை நடத்தினால் அங்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கைகளுக்கு ஆட்சி அதிகாரம் போகும்.

கிழக்கு மாகாணத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவுடன் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் கைகளில் ஆட்சி அதிகாரம் வடக்கு கிழக்கில் தமிழ்பேசும் மக்களின் கைகளில் ஆட்சி அதிகாரம் இருக்கும் நிலை ஏற்பட்டால் இனப்பிரச்சினைக்கு சுயாட்சி அதிகாரங்கள் கொண்ட அரசியல் தீர்வை வழங்கவேண்டும் என்ற சர்வதேச அழுத்தம் அதிகரிக்கும் என்ற அச்சம்.

எனவே, இந்நிலை ஏற்படாதிருக்க வேண்டுமானால் வடக்கு மாகாண சபைத் தேர்தலை நடத்தாமல் இழுத்தடிக்கவேண்டும் என்ற நிலைப்பாட்டில் அரசாங்கம் இருப்பதாக ஒரு தகவல்.

இதற்கு உரமூட்டுமாற்போல் அரசின் பங்காளிகளான பேரினவாதக் கட்சிகளான தேசிய சுதந்திர முன்னணியும், ஜாதிக ஹெல உறுமயவும் வடக்கில் தேர்தல் நடத்தப்படுவதை பகிரங்கமாக எதிர்க்கின்றன. இந்த நிலையில் வடக்குத் தேர்தல் ஒரு கேள்விக்குறியாகவே உள்ளது.

அநாமிகன்

# ஆணாக மாறிய பெண்ணுக்கும் பெண்ணாக மாறிய ஆணுக்கும் விநோத திருமணம்



திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றன என்கின்ற இந்த முதுமொழியை தற்பொழுது நடக்கவுள்ள இந்த திருமணத்தைக் குறித்து கற்பனை செய்து பார்த்தால் சொர்க்கம் என்ற ஒன்று உண்டா என்ற சந்தேகம் சிலருக்கு தோன்றக் கூடும்.

பிரிட்டனில் வசிக்கும் மார்ஃபிட்(56) என்பவர் சிறுவனாக இருந்தபோது பெற்றோர் இவருக்கு இட்ட பெயர் லெஸ்லி. இரண்டு மனைவியின் மூலமாக 5 குழந்தைகளைப் பெற்ற இவருக்கு 50 வயதில் ஓர் விபரீத ஆசை தோன்றியது.

விபரீதத்தின் விளைவாக பாலின மாற்று அறுவைச் சிகிச்சை செய்து கொண்ட இவர், பெண்ணாக மாறி தனது பெயரை ஹெலன் மார்ஃபிட் என்று மாற்றிக் கொண்டார்.

இதேபோல், கேட்டி என்ற பெயருடன் 5 குழந்தைகளுக்கு தாயாக வாழ்ந்த 46 வயது பெண்ணும் தனது விபரீத ஆசையால் பாலியல் மாற்று அறுவைச்சிகிச்சை செய்து ஆணாக மாறினார்.

அத்துடன் அவரவர் வேலையை பார்த்துக் கொண்டு இருந்து விட்டால், இவர்கள் செய்திகளில் இடம்பெற இயலாது அல்லவா

ஆகையால் காலத்துக்கும் மாறாதது மாறிவரும் மாற்றம் மட்டும் தான் என்ற கோட்பாட்டின்படி, பாலின மாற்றத்திற்கு பின்னர் மாறுபட்ட ஓர் தாம்பத்யத்தை சுவைக்கத் துடித்த இருவரும் விதிவசத்தால் ஒருவரை ஒருவர் சந்தித்து காதல் வயப்பட்டுள்ளனர்.

காதல் முற்றி, கல்யாண நிலைக்கு சென்று விட்ட நிலையில் விரைவில் ஹெலன் மார்ஃபிட்-ஃபெலிக்ஸ் லாஸ் இணையர் தம்பதியராக மோதிரம் மாற்றிக் கொள்ள தீர்மானித்துள்ளனர்.



## இந்தக் குளத்தின் நடுப்பகுதிவரை சென்றாலும் நீங்கள் நனையமாட்டீங்க!

வழக்கமாக குளங்களை பார்வையிடுபவர்கள் அதன் ஓரத்தில் நின்றே இரசிக்க வேண்டும். ஆனால் அவுஸ்திரேலியாவில் அமைந்துள்ள குளமொன்றில் அதன் நடுப்பகுதி வரை சென்று திரும்பமுடியும்.

உலகம் பேசுகிறது

## இந்த குண்டுப் பெண்ணைத் தூக்குவதற்கு 8 மணிநேரம் ஆகிடிச்சாம்



இங்கிலாந்து நாட்டில் உள்ள சவுத் வேல்ஸ் பகுதியில் ஜோர்ஜியா டாவிஸ்(19) என்ற 400 கிலோ எடையுள்ள குண்டுப் பெண் வசிக்கிறார்.

அளவுக்கு மீறிய உணவு, குளிர்பானம் உட்கொண்ட பழக்கத்தால் உடல் எடை அபரிமிதமாக அதிகரித்து எழுந்து நடக்க கூட முடியாமல் அவதிப்படுகிறார்.

அதுமட்டுமின்றி அவருக்கு சில நோய்த் தொல்லையும் தொற்றிக் கொண்டது. இதனால் அவரை மருத்துவமனையில் சேர்க்க முடிவு செய்தனர். ஆனால், வாசல் வழியாக இவரால் வெளியே வர முடியாது.

எனவே, இவரை பத்திரமாக வீட்டை விட்டு வெளியே எடுப்பதற்காக 30 கட்டிட நிபுணர்கள், பொலிஸார், தீயணைப்பு படையினர், மீட்புக் குழுவினர் என பெரிய பட்டாளமே கூடியது. வீட்டின் இரு சுவர்களில் இருந்த ஜன்னல்களை அகற்றி 10 அடிக்கு வழியை ஏற்படுத்தினார்கள்.

பின்பு கிரேன் மூலம் அவரைத் தூக்கி தயாராக நின்ற அம்புலன்ஸில் ஏற்றி அனுப்பி வைத்தார்கள். காலை 9 மணிக்கு தொடங்கிய இந்த மீட்பு நடவடிக்கை மாலை 5 மணிக்கு தான் நிறைவு பெற்றது. அதாவது சுமார் 8 மணி நேரம் போராடி வெற்றிகரமாக நடத்தி முடித்தார்கள்.

இதையொட்டி அந்த வீதியில் வாகன போக்குவரத்து தடை செய்யப்பட்டது. இந்த குண்டுப் பெண்ணை வெளியேற்றிய பணியை வேடிக்கை பார்க்க சாலையில் பெருங்கூட்டமே கூடி நின்றது.

## விஷப்பாம்பிற்காக கொல்லப்படும் வாத்துக் குஞ்சுகள்

சீனாவில் பெருமளவிலான வாத்துக் குஞ்சுகள் விஷப்பாம்புகளின் உணவுக்காக அவற்றின் பண்ணைகளுக்கு விநியோகிக்கப்படுகின்றன. இவை பறவைக் காய்ச்சலால் பாதிக்கப்பட்ட வாத்துகளின் முட்டைகளிலிருந்து வெளிவந்த குஞ்சுகளாகும். மிகக்குறைந்த விலையில் இவை சந்தையில் விற்கப்படுகின்றன.

முட்டையிலிருந்து இரண்டு அல்லது மூன்று நாட்கள் வயதுடைய இக்குஞ்சுகள் பாம்புகளின் பிரியமான உணவாகும்.



# என்னாச்சி...!

## இனி குடிப்பாரா கோவிந்து...?

எங்கள் வீட்டுக்கு அருகில் வசிக்கும் கோவிந்து என்பவருக்கும் நடிகர் வடிவேலுக்கும் ஒரு சம்பந்தம் உண்டு. என்ன என்று கேட்கிறீங்களா? ஒரு படத்தில் வடிவேலு ரொம்ப நல்லவராக வீட்டில் அம்மா அப்பாவிடம் ஆசீர்வாதம் வாங்கிவிட்டு தொழிலுக்குச் செல்வார், ஆனால் இரவு வீடு திரும்பும்போது குடித்துவிட்டு தலைகீழாக அட்டகாசம் செய்வார்.

அப்படித்தான் கோவிந்தனும் காலையில் சந்தோஷமாக தொழிலுக்கு செல்வார். மாலை யாராவது தூக்கிக் கொண்டு வந்துதான் வீட்டில் போடுவார்கள். அந்த அளவுக்கு போதையில் இருப்பார். நடக்கவே முடியாத போதையில் இருந்தாலும் வீட்டுக்கு வந்ததும் மறக்காமல் மனைவி பிள்ளைகளை கண்மூடித்தனமாக அடித்து துன்புறுத்துவார். தினமும் அடிதாங்காது அவரது மனைவி பிள்ளைகள் போடும் கூச்சல் சகிக்காது.

போதை தெளிந்ததும் யாராவது அறிவுரை சொல்லலாம் என்றால் விடிந்தால் அவரைப் போல நல்லவர் யாருண்டு என்ற விதத்தில் நடந்து கொள்வார். எனவே யாரும் அவருக்கு அறிவுரையும் சொல்வதில்லை. அத்தோடு இப்போதெல்லாம் அடுத்தவர் விடயத்தில் தலையிட யாரும் விரும்புவதில்லை. பாதிக்கப்பட்டவர்கள் தான் தமக்கான நியாயத்தை தேடிக்கொள்ள வேண்டும். ஆனால் கோவிந்துவின் மனைவியோ ஒரு அப்பாவி. வாயில்லாப் பூச்சி.

சில நாட்களாக கோவிந்துவின் வீட்டில் வழமைக்கு மாறான அமைதி நிலவியது. கோவிந்தன் ஊரில் இல்லையா என்று பார்த்தபோது வீட்டில்தான் இருந்தார். மிக அமைதியாக டீ.வி பார்த்துக் கொண்டு. என்ன ஏதென்று விசாரித்த போதுதான் விசயம் தெரிந்தது.

கோவிந்து வழமை போல குடித்துவிட்டு வந்து அட்டகாசம் செய்திருக்கிறார். வாயில்லாப்பூச்சியாக இருந்த அவர் மனைவி பொங்கி எழுந்திருக்கிறாள். கை நீட்டிய கோவிந்துவின் கையை உடைத்ததோடு மறுநாள் காலை அவருக்கு சோறு, தண்ணி எதுவும் கொடுக்காமல் புறக்கணித்திருக்கிறாள்.

பிறகென்ன செத்த பாம்மை அடிக்கும் அளவுக்கே வீரம் கொண்ட கோவிந்துவுக்கு இனி நல்லவராக இருப்பதைத் தவிர வேறு வழியில்லை. ஆடுகிற மாட்டை ஆடித்தான் கறக்க வேண்டும்.



## காதலர்களே கவனியுங்கள்!!

ஒரு பஸ் பயணத்தின்போது நான் கண்ட சம்பவம் இது. நான் என் தங்கை, தந்தையோடு பஸ்ஸில் பயணித்துக் கொண்டிருந்தேன். ஞாயிற்றுக்கிழமை என்பதால் பஸ்ஸில் அதிகக்கூட்டம். பெரியவர்கள் சிறுவர்கள் என பலரும் நின்று கொண்டு பயணித்தனர்.


வெய்யில் கொடுமை, பஸ்ஸில் திணறும் கூட்டம் எதையுமே பொருட்படுத்தாது மூன்று காதல் ஜோடிகள் ஒருவர் மீது ஒருவர் சாய்ந்து மிக நெருக்கமாக அமர்ந்திருந்தனர். அவ்வப்போது கன்னத்தோடு கன்னம் உரசுவது, சில்மிஷம் செய்வது என பலர் பார்க்கின்றனரே என்ற எண்ணம் சிறிதும் இல்லாமல் விளையாடிக் கொண்டிருந்தனர்.

இவற்றை பார்த்த சிறுவர்கள், இளைஞர்கள் தங்களுக்குள் சிரித்துக் கொண்டனர். பெரியவர்கள் தலையிலடித்துக் கொண்டனர்.

பணம் கொடுத்து பயணம் செய்கிறார்கள், மேலும் அது அவர்களின் உரிமை என்பது போல நடத்துனரும் அவர்களைக் கண்டு கொள்ளவில்லை.

காதல் செய்வது அவர்களின் உரிமையாக இருக்கலாம். ஆனால் பொது இடத்தில் இப்படி நடந்து கொள்வது அநாகரிகமல்லவா? அதுவும் இதைப் பார்க்கும் இளைஞர்களும் சிறுவர்களும் தாமும் அவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தால் உந்தப்படமாட்டார்களா?

எனவே காதலர்களே சிந்தியுங்கள். பஸ்ஸில் உங்கள் பெற்றோரோ அல்லது உங்கள் சிறுவயதுத் தம்பி தங்கைகளோ பயணித்தால் அவர்கள் முன்பாக நீங்கள் இப்படி நடந்து கொள்வீர்களா? அவர்கள் நாளை தவறான வழியில் செல்ல நீங்களே காரணமாக இருப்பீர்களா? சிந்தியுங்கள்!



இவ்வாறான சம்பவங்கள் உங்கள் பகுதியிலும் இடம்பெற்றிருந்தால் எமது முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.

தொகுப்பு -அபி

## நானும் மனுசன்தான்!

நான் கொழும்பில் ஒரு தனியார் கம்பனியில் வேலை செய்கிறேன். எமது நிறுவனத்தில் பியோனாக வேலை செய்பவர் ஆறுமுகம். என்னையும் ஆறுமுகத்தையும் தவிர மற்ற அத்தனை பேரும் பெரும்பான்மையினத்தைச் சேர்ந்தவர்கள்.

ஆறுமுகத்திற்கு வயது 60 இற்கு மேல் இருக்கும். எல்லோரும் வயதுக்கு கூட மரியாதை கொடுக்காமல் வா போ என அழைப்பார்கள். மனிதாபிமானம் சிறிதும் இன்றி ஓயாமல் வேலை வாங்குவார்கள்.

எமது நிறுவனத்தில் வருடாந்தம் சுற்றுலா செல்வது வழக்கம். இம்முறை நுவரெலியாவிற்கு செல்ல தீர்மானித்தோம். இம்முறை ஆறுமுகத்தை இந்த முறை சுற்றுலாவிற்கு வரும்படி அழைத்தது எனக்கே ஆச்சரியமாக இருந்தது. சுற்றுலா செல்லும் ஒவ்வொருவரிடமும் 3000/= ரூபா அறவிடப்பட்டது. ஆறுமுகத்திடமும் அதே தொகை அறவிப்பட்டது. சுற்றுலாவிற்கு சிறிய ரக பஸ்ஸை புக் செய்திருந்தார்கள். எல்லோருடைய மூட்டை முடிச்சுகளையும் ஏற்றிய பின் பஸ்ஸில் கடைசியாக ஏறினார் ஆறுமுகம். ஆறுமுகத்திற்கு தனியான இருக்கை ஒதுக்கப்பட்டிருக்கவில்லை. ட்ரைவர் சீட்டுக்கு பக்கத்தில் இருந்த சிறிய இடத்தில் அமர்ந்து கொண்டார். அது அவருக்கு முதல் அடி. நுவரெலியாவில் ஒரு பங்களா நாங்கள் தங்குவதற்காக ஒதுக்கப்பட்டிருந்தது. எல்லோரும் அவரவருக்கு விருப்பமான அறையில் ஒதுங்கிக் கொள்ள ஆறுமுகத்திற்கு ஹோலில்தான் படுக்க இடம் கிடைத்தது. பஸ்ஸின் ஆட்டத்திற்கு ஈடுகொடுக்கமுடியாத நாற்காலியில் சிரமப்பட்டு பயணம் செய்த ஆறுமுகத்திற்கு குளிரில் இரவு உறக்கமும் கெட்டது.

அத்தோடு ஓயவில்லை. மறுநாள், ஆறுமுகம் இங்கே வா.., இதை எடு.. , அதை.. எடு..,. பயணப்பையை தூக்கி வா... சாப்பாடு வாங்கி வா... தண்ணி கொண்டுவா... என அடுத்தடுத்து ஏவல்கள். முகம் சுளிக்காமல் அத்தனையையும் செய்தார். ஆறுமுகத்தைப் பார்க்க எனக்கே கவலையாக இருந்தது. சுற்றுலா முடிந்து மறுநாள் லன்ச் டைமில் சுற்றுலா பற்றி பேசிக் கொண்டிருந்தோம்.

சே இந்த மெனேஜரை டூருக்கு கூட்டிக் கொண்டு போயிருக்கக்கூடாது. அங்கேயும் வந்து கடுகடுன்னு இருந்து அவர் திமிரக் காட்டிக் நம்மளை என்ஜோய் பண்ண முடியாம செஞ்சிட்டாரு. ஆபிசில மட்டும்தான் அவர் மனேஜர் வெளியில வந்தா சாதாரண மனுசன்தான். இதைக் கூட புரிஞ்சிக்க முடியாத மாட்டு ஜென்மம் என சக ஊழியரான லசந்த சொல்ல அதை எல்லோரும் ஆமோதித்தார்கள்.

அப்போது அங்கே வந்த ஆறுமுகம். சரியாச் சொன்னீங்க மாத்தயா ஆபிசுல மட்டும்தான் நான் பியோன். வெளியில நானும் சாதாரண மனுசன். ஆனா அங்கே என்ன எப்படி நடத்தினீங்க சார், வெளியிலயும் என்னை ஒரு பியோனாத்தானே நடத்தினீங்க என்று சொல்லிவிட்டு விறுவிறுவென்று போய் விட்டார்.

எங்கள் எல்லோருக்கும் சாட்டையால் முதுகில் அடித்த மாதிரி இருந்தது. மற்றவர்களிடம் மதிப்பையும் சுதந்திரத்தையும் எதிர்பார்க்கும் நாம் மற்றவர்களுக்கு அதைக் கொடுக்கிறோமா?



தினக்குரல்

Voice of Students

இலவச இணைப்பிதழ்

வெள்ளி தோறும்

# வித்யாதரம்

100% NATURAL

கல்வியால் ஆகாதது ஒன்றுமில்லை


மாணவர் முழுப்பெயர் : - ..............................................................

கல்வி கற்கும் பாடசாலை :- ..............................................................

**மாணவர்கள் விடைகளை எழுதி அனுப்ப வேண்டிய முகவரி "கல்விக்குரல்" யாழ். தினக்குரல், இல. 336 கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.**

★ **சரியான விடையின் கீழ் கோடிடுக.**

01) இங்குள்ள உருக்களை மூன்று கூட்டங்களாகப் பிரிக்கலாம்.




இக்கூட்டங்களைச் சரியாகக் காட்டும் விடையைத் தெரிவு செய்க.


1) CE BD AF 2) CD AD EF 3) AB CD EF 4) AE BD CF

02) பொருத்தமற்ற உருவைக் கொண்டுள்ள அடைப்பினைத் தெரிவு செய்க.


1) 2) 3) 4)




03) வெற்றிடமாய் உள்ள அடைப்புக்களில் வரவேண்டிய விடையைத் தெரிவு செய்க.



04) கோலத்தை அவதானித்து வெற்றுக்கூட்டினுள் வரவேண்டிய விடையைத் தெரிவு செய்க.



1) 2) 3) 4)




★ **05 ஆம், 06 ஆம் வினாக்கள் கீழே உள்ள அ, ஆ, இ ஆகிய உரு நிரைகளை அடிப்படையாகக் கொண்டவை. அதனை அவதானித்து வினாக்களுக்குரிய விடையைத் தெரிவு செய்க.**

அ)

ஆ)

இ)




05) அ, ஆ, இ ஆகிய மூன்று நிரைகளிலும் உள்ள உரு எது?


1) V 2) Λ 3) ||| 4) ///

06) இரண்டு நிரைகளில் மாத்திரம் காணப்படும் உரு எது?

1) 2) 3) 4)




07) முதலில் தரப்பட்டுள்ள அடைப்பினுள் காணப்படும் உருக்களை ஒத்த உருக்களைக் கொண்ட அடைப்பினைத் தெரிவு செய்க.



1) 2) 3) 4)

08) பின்வரும் கடிகார முகங்களில் பழுதடைந்துள்ள கடிகாரத்தின் முகத்தைத் தெரிவு செய்க.

1) 2) 3) 4)



★ **09ஆம், 10ஆம் வினாக்கள் ஒவ்வொன்றிலுமுள்ள வேறுபட்ட உருவைத் தெரிவு செய்க.**

09) 01)



02)




03)



04)



10) 01) 02) 03) 04)




★ **11ஆம், 12ஆம் வினாக்களில் தரப்பட்டுள்ள கூற்றுக்களை நன்கு விபரிக்கும் விடையைத் தெரிவு செய்க.**

11) ஒற்றுமை பலம் தரும்.
1) ஒற்றுமைக்குப் பலமே காரணம்
2) பலம் சேர்ந்தால் ஒற்றுமை உருவாகும்
3) ஒன்றுபட்டால் பலம் கிடைக்கும்
4) பலம் கிடைத்தால் ஒன்றுபடுவர்

12) பொய் பேசுவோர் வாழ்க்கையில் முன்னேறமாட்டார்கள்.
1) வாழ்க்கையில் முன்னேறாதவர்கள் பொய் பேசியோர் ஆவர்.
2) வாழ்க்கையில் முன்னேறிய எவரும் பொய் பேசமாட்டார்கள்.
3) வாழ்க்கையில் முன்னேற பொய் பேசுதல் தடையாக அமையும்
4) வாழ்க்கையில் முன்னேறியவர்கள் பொய் பேசாதவர்கள்

13) இந்த உருவின் வெற்றுப் பகுதிக்குப் பொருத்தமான உருவைத் தெரிவு செய்க.




01) 02) 03) 04)

14) கீழுள்ள உருவின் கோலத்திற்கு ஏற்ப வெற்றிடத்தில் வரவேண்டிய உருவைத் தெரிவு செய்க.




1) 2) 3) 4)




15) நிகழ்ச்சி ஒன்றின் ஐந்து சந்தர்ப்பங்கள் A, B, C, D, E என்னும் ஐந்து உருக்களினால் காட்டப்பட்டுள்ளன. அவற்றின் சரியான ஒழுங்கு வரிசையைக் காட்டும் விடையைத் தெரிவு செய்க.



A B C D E

1) CBADE 2) BAEDC
3) CBAED 4) EBCDA

16) உருவை மிக நன்கு விபரிக்கும் விடையைத் தெரிவு செய்க.




1) பால், பணம், கன்று
2) பால், புல், மிருகம்
3) பசளை, பால், இறைச்சி
4) போசணை, பசளை, பணம்

17) கீழே தரப்பட்டுள்ள எல்லாக் கருத்துக்களுடனும் மிகப் பொருந்துகின்ற உருவைத் தெரிவு செய்க.

இரவு - ஒளி - குளிர்

1) 2) 3) 4)



★ **பின்வரும் பாடலைப் படித்து 18ஆம், 19ஆம் வினாக்களுக்குரிய விடையைத் தெரிவு செய்க.**

*துன்பத்தை வெல்லும் கல்வி கற்றிட வேண்டும்*
*சோம்பலைக் கொல்லும் திறன் பெற்றிட வேண்டும்*
*வம்பு செய்யும் குணமிருந்தால் விட்டிட வேண்டும் - அறிவு*
*வளர்ச்சியிலே வான் முகட்டைத் தொட்டிட வேண்டும்*

18) நாம் கைவிட வேண்டியது யாது?
1) சோம்பலை 2) துன்பத்தை
3) வம்பு செய்யும் குணத்தை 4) திறன் பெறுவதை

19) "**வான் முகட்டைத் தொடுதல்** " என்பதன் கருத்து யாது?
1) வானத்தைத் தொடுதல் 2) வானத்தில் பறத்தல்
3) ஒன்றின் உச்சத்தை அடைதல் 4) ஓயாது முயற்சித்தல்

20) வீட்டு முற்றத்தில் உள்ள மாமரம் ஒன்றில் பெரும்பாலும் காணக்கூடியவற்றை உள்ளடக்கிய விடையைத் தெரிவு செய்க.
1) இலை, கிளை, பறவை 2) காய், பூ, தண்டு
3) காகம், சிறுவர், பழம் 4) இலை, கிளை, தண்டு

## வினாத்தாள் - 02

## 1 மணித்தியாலம் 15 நிமிடம்

மாணவர் முழுப்பெயர் : - ...............................................

கல்வி கற்கும் பாடசாலை : - ...............................................

### பகுதி II

**01) பின்வரும் பந்தியை வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

**இலங்கையில் நான் அவ்வளவு கடுமையாக நடுங்குவதில்லை. ஆனால் உலகின் சில நாடுகளில் எனது செயல் மிகக் கடுமையானதாக இருக்கிறது. சீனா, இந்தோனேசியா, அந்தமான் தீவுகள், ஜப்பான் போன்ற நாடுகளில் சொல்லில் அடங்கா அழிவுகளை ஏற்படுத்தியிருக்கின்றேன். அண்மையில் ஈரான் - பாகிஸ்தான் நாட்டு எல்லையில் நான் நடுங்கியதால் ஏற்பட்ட அனர்த்தங்களை நீங்கள் ஊடகங்களில் பார்த்திருப்பீர்கள். என்னைப் புவி நடுக்கம், நிலநடுக்கம் என வேறு பெயர் கொண்டும் அழைக்கின்றனர்.**

01) பந்தியில் எது தன் கதையைச் சொல்கிறது?

______________________________

02) "அழிவு" என்பதன் எதிர்க்கருத்துச் சொல்லை எழுதுக.

______________________________

03) "அடைமொழியை" இனங்கண்டு எழுதுக.

______________________________

04) பந்தியில் வந்துள்ள முன்னிலைப் பன்மைப் பெயர்?

______________________________

05) இடப்பெயர் ஒன்று எழுதுக.

______________________________

06) "நான்" என்பதன் பன்மை வடிவம்?

______________________________

07) நிகழ்கால வினைச் சொல்?

______________________________

08) "புவிநடுக்கம்" என்னும் சொல்லுக்குப் பந்தியில் வந்த வேறு சொல்?

______________________________

09) "அண்மை" என்பதன் ஒத்த பதம்?

______________________________

10) பந்தியில் ஊடகங்கள் என வந்துள்ள சொல்லால் குறிப்பிடப்படுவன எவை?

______________________________

( 10 x 1 = 10 புள்ளிகள் )

***02)* பின்வரும் தொடர்மொழிகளின் கருத்தை வெளிப்படுத்தும் தனிச் சொல்லை எழுதுக.**

01) வயலும் வயல் சார்ந்த இடம் -

______________________________

02) பெற்றோரை இழந்தவன் -

______________________________

( 2 x 1 = 2 புள்ளிகள் )

***03)* சரியான சொல்லைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

01) காய்சல், காச்சல், காய்ச்சல், காய்சல்

02) பல்கலைக்கழகம், பல்களைக்கழகம், பல்கழைக்களகம், பல்கலைக்களகம்

( 2 x 1 = 2 புள்ளிகள் )

***04)* பின்வரும் சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள ஒரு வசனம் ஆக்குக.**

01) யாழ்.மாவட்டத்தில் / நோய் / பரவி / டெங்கு / மக்களை/ இருக்குமாறு / வேண்டுகின்றோம் / விழிப்புடன் / வருகிறது.

______________________________

______________________________

02) காலை / வேளைகளிலும் / பல் / மாலை / துலக்குதல் / வேண்டும் / நாம் / இரு

________________________________

( 2 x 1 = 2 புள்ளிகள் )

**05) பின்வரும் வாக்கியங்களிலுள்ள எழுத்துப் பிழைகளைத் திருத்தி வாக்கியத்தை மீண்டும் எழுதுக.**

01) வறப்புயர நீர் உயறும் என வாள்த்தினார்.

________________________________

02) எளி வலையுள் வாலும் ஒரு பிறாணியாகும்.

________________________________

( 2 x 1 = 2 புள்ளிகள் )

**06) பின்வரும் பழமொழிகளின் கருத்தை அதன் கீழ் எழுதுக.**

01) காற்றுள்ள போதே தூற்றிக்கொள்.

________________________________

02) உலைவாயை மூடலாம், ஊர் வாயை மூட முடியுமா?

________________________________

( 2 x 1 = 2 புள்ளிகள் )

**07) பின்வரும் ஆங்கிலச் சொற்களின் கருத்தினைத் தமிழில் எழுதுக.**

01) Cupboard - ________________

02) Butterfly - ________________

03) One Thousand - ________________

04) Happy Birthday - ________________

( 4 x 2 = 8 புள்ளிகள் )

**08) பின்வரும் சிங்களச் சொல்லின் கருத்தைத் தமிழில் எழுதுக.**

01) மாளு - ________________

02) வத்துறதென்ன - ________________

( 2 x 2 = 4 புள்ளிகள் )

**09) பின்வரும் தமிழ்ச்சொல்லுக்குச் சிங்கள உச்சரிப்பு எழுதுக.**

01) சூரியன் - ________________

02) தேங்காய் - ________________

( 2 x 2 = 4 புள்ளிகள் )

**10) பின்வரும் வினாக்களுக்கான சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

01) நல்வாழ்வுக்கு அவசியமற்றது?

1) சுத்தம்
2) சூரிய நமஸ்காரம்
3) சுத்தமான உணவு
4) கோபம்

02) "உடல் இப்போது தளர்வாக உள்ளது. இனி உள்ளத்தையும் தளர்த்திக் கொள்ளுங்கள். ஒலிகளைச் செவிமடுங்கள்" இக்கூற்றுக்கள் அடங்கிய பகுதி எது?

1) மலர்வு 2) மனவுறுதி
3) மனதைத் தளர்த்துதல் 4) பிரார்த்தனை

03) இலவச பாடநூலை அடுத்த வருடத்தில் மற்றுமொரு மாணவனுக்குப் பயன்படுத்தக்கூடிய வகையில் தொடர்பானவர்?

1) ஆசிரியர் 2) மாணவர்கள்
3) அதிபர் 4) பெற்றோர்

04) இலங்கையில் விமானத் தளங்கள் உள்ள பிரதான இடங்களில் ஒன்று அல்லாதது?

1) இரத்மலானை 2) கண்டி
3) கட்டுநாயக்கா 4) பலாலி

05) பாதுகாப்பிற்காக தன்னுடலை ஓட்டினுள் ஒளித்துக் கொள்ளும், ஒரே தடவையில் ஆயிரம் முட்டைகளை இடும் பிராணி

1) முதலை 2) நத்தை
3) உடும்பு 4) ஆமை

06) நீரில் கலக்காத திரவங்களில் ஒன்று.

1) மதுசாரம் 2) தேங்காய் எண்ணெய்
3) வினாகிரி 4) பால்

07) குப்பைகூளங்களையும், இலை, மரம் என்பவற்றை உக்கச் செய்வது.

1) காகம் 2) தேனீ
3) மண்புழு 4) கறையான்

08) சூரிய நமஸ்காரத்தின் நான்காம் கட்டத்தைக் காட்டும் உரு எது?

1) 

2) 



அழகு..,
உடல் நலம்..,
குழந்தை வளர்ப்பு..,
சாதனை மகளிர்..,
ஆலோசனை..,
உளவியல்..,

# சிநேகிதியே

## திருமணத்திற்கு தயாராகும் பெண்களுக்கு

மணப்பெண் அலங்காரம் என்பது இன்று எல்லா மதத்தினரிடையேயும் தொன்றுதொட்டு இருந்து வரும் பழக்கமாகும்.

ஆயினும், அன்றையகாலம் போல் அல்லாமல் இன்றைய காலத்தில் திருமணம் என்பது மிகவும் அவசர அவசரமாக நடைபெறுகின்ற ஒரு விடயமாகிவிட்டது என்பதில் எந்த சந்தேகமும் இல்லை என்கிறார் நம் அழகியற் கலை நிபுணரான தனு ரசாக்.

அத்தோடு இக்காலத்தில் பெண்கள் அநேகமாக வீட்டிலோ வெளியிலோ ஏதோ ஒரு தொழில்புரிந்த வண்ணம் இருக்கின்றார்கள். இந்த நிலையில் அவர்களால் அவர்களது அழகைப் பேணிப் பாதுகாப்பது என்பது மிகவும் சிரமத்திற்குரிய விடயமாக மாறியுள்ளது.

இந்த நேரத்தில் திடீரென திருமணம் நிச்சயமாகும்போதுதான் அவர்களுக்கு தங்களை அழகுபடுத்திக் கொள்ளும் எண்ணம் அதிகமாகிறது.

குறைந்த பட்சம் 6 மாதம் முன்னதாகவே திருமணம் நிச்சயமான பெண்கள் தங்களைத் தயார் செய்து கொள்ளவேண்டும். ஆயினும், இன்றைய காலத்தில் அவ்வாறு நேரம் ஒதுக்கி இவற்றை செய்துகொள்ளும் சந்தர்ப்பங்கள் அமைவதில்லை.

இவ்வாறானவர்கள் குறைந்தபட்சம் இரண்டு மாதங்களுக்காகவாவது தம்மை தயார்ப்படுத்திக் கொள்வது சிறந்ததாகும். அப்போது தான் மணப் பெண்ணின் முக அழகானது வீடியோ, போட்டோவில் வசீகரமானதாகத் தெரியும்.



ஒரு மணப் பெண்ணைப் பொறுத்தவரையில் அவளது உச்சந்தலை முதல் உள்ளங்கால் வரை பேணுதல்வேண்டும்.


தனு ரசாக்

முதலில் தலை முடியை சுத்தமாக்கி பளபளப்பாக வைக்கவேண்டும். பின்னர் முகத்துக்கு பிளீச்சிங் செய்து பின் கோல்டன் பேஷியல் செய்துகொள்ளலாம். பிறகு கை, கால்களில் உள்ள வேண்டாத முடியை நீக்க வெக்சிங் செய்தல் வேண்டும். அதன் பிறகு பிரெஞ்ச் பெடிக்யூர், மெனிக்யூர் ஆகியவற்றை செய்து பாதங்களையும், நகங்களையும் மிளிரச்செய்யலாம்.

தற்போது இலகுவாக கை, கால்களில் போடப்படும் மெஹந்தி எனப்படும் மருதாணி போடும் டிசைன்களை இப்பொழுது பலரும் விரும்பிப் போட்டுக் கொள்கிறார்கள்.

அரைத்தேக்கரண்டி எலுமிச்சம்பழச் சாறுடன் சிறிது பால் சேர்த்து கிளிசரின் சில துளிகளை அதனுடன் கலந்து 1/2 மணி நேரம் வைத்து விடுங்கள். பிறகு இதை எடுத்து இரவு நித்திரைக்குச் செல்வதற்கு முன்பு முகத்தில் நன்றாகப் பூசி காலையில் முகத்தை குளிர்ந்த நீரால் கழுவ வேண்டும். இதை தினமும் தவறாமல் செய்து வந்தால் உங்களது முகம் அபாரமாக பளிச்சிடும்.

கனிந்த தக்காளிச் சாறு எடுத்து காலை, மாலை முகம் முழுவதும் பூசி ஒரு மணி நேரம் உலரவிடவும். பிறகு வெதுவெதுப்பான நீரில் தினமும் கழுவிவர முகம் தக்காளிப்பழத்தைப் போன்று பொலிவாகவரும்.

இனியென்ன திருமணத்திற்கு ரெடியாக வேண்டியதுதான்.

எஸ்.பிரியதர்ஷினி

# தையல் பயிற்சி

இடுப்பின்
சுற்றளவுக்கு இலாஸ்டிக் இட்ட

**பெயார்ட் பாவாடை**

1. இடுப்பின் சுற்றளவு 20' விட குறைவு என்றால் முக்கோண பகுதியிலிருந்து கீழ்நோக்கி 10'' குறிக்க வேண்டும்.
2. இடுப்பு சுற்றளவு 20-30 முக்கோணத்திலிருந்து கீழ்நோக்கி 13 குறித்துக் கொள்ளவேண்டும்.
3. இடுப்புச் சுற்றளவு 39'' விடக் கூடுதலாக இருந்தால் முக்கோணத்திலிருந்து கீழ்நோக்கி 15'' குறித்துக்கொள்ளவேண்டும்.

இடுப்பின் சுற்றளவு - 24
உயரம் - 35




தையல் கலையின் பரிமாணங்கள் தருபவர் :-
திருமதி. ராஜேஸ்வரி குமார் - பண்டாரவளை



# மாம்பழ மில்க் ஷேக்

**தேவையானவை:** மாம்பழத் துண்டுகள் (தோல் நீக்கியது) - ஒன்றரை கப்,
பால் - ஒரு லீற்றர்,
சர்க்கரை - கால் கப்.

**செய்முறை:** பாலில் சர்க்கரையை சேர்த்து, சர்க்கரை கரையும் வரை நன்கு காய்ச்சி இறக்கி, ஆற வைக்கவும். மாம்பழத்தை மிக்ஸியில் (கூழ் போல்) அரைத்து எடுக்கவும். மாம்பழ விழுதை பாலில் விட்டு நன்கு கலக்கவும். அப்படியே ஃப்ரிட்ஜில் வைத்து, குளிரவிட்டு பரிமாறவும்.



# நெல்லிக்காய் ஊறுகாய்

**தேவையான பொருட்கள்**

பெரிய நெல்லிக்காய் - 10
எலுமிச்சம்பழம் - 5
வெந்தயம் - 1/2 தேக்கரண்டி
சீரகம் - 1/2 தேக்கரண்டி
மஞ்சள் தூள் - 1/2 தேக்கரண்டி
கடுகு - 1 தேக்கரண்டி
எண்ணெய் - 1/4 கோப்பை
மிளகாய்த்தூள் - தேவையான அளவு
உப்பு - தேவையான அளவு

**செய்முறை**

1. நெல்லிக்காயை சுத்தம் செய்து தண்ணீர் சேர்க்காமல் ஆவியில் வைத்து வேக வைக்கவும்.
2. நெல்லிக்காய் சூடு ஆறியதும், பல் பல்லாக உதிர்த்து கொட்டையை நீக்கவும்.
3. அதனுடன் உப்பு, மஞ்சள் தூள், மிளகாய்த் தூள், எலுமிச்சம்பழச் சாறு ஆகியவற்றைச் சேர்க்கவும்.
4. வெந்தயம், சீரகம் ஆகியவற்றை தனியே வறுத்து தூளாக அரைத்துக் கொள்ளவும்.
5. வாணலியில் எண்ணெய் விட்டுச் சூடாக்கி, கடுகு சேர்த்து தாளித்து, அதனுடன் வெந்தயம் மற்றும் சீரகத்தூளைச் சேர்க்கவும்.
5. தாளித்த பொருட்களை ஊறுகாயுடன் சேர்த்து உடனடியாக பரிமாறவும்.

**குறிப்பு**

1. சின்ன நெல்லிக்காயிலும் இந்த ஊறுகாயை தயாரிக்கலாம். அப்படிச் செய்யும் போது உப்பு, மிளகாய் அளவை குறைத்துக் கொள்ளவும்.



## பாடல்

திரைப்படம்:- கடல்
இசை:- ஏ. ஆர். ரஹ்மான்
பாடியவர்கள்:- அபே ஜோத்புர்க்கர், ஹரிணி
பாடல்வரிகள்:- வைரமுத்து

மூங்கில் தோட்டம்
மூலிகை வாசம்
நெறஞ்ச மௌனம்,
நீ பாடும் கீதம்
பௌர்ணமி இரவு -
பௌர்ணமி இரவு
பனிவிழும் காடு -
பனிவிழும் காடு
ஒத்தையடி பாதை
உன்கூட பொடிநட

இதுபோதும் எனக்கு இதுபோதுமே
வேறென்ன வேணும் நீ போதுமே
இதுபோதும் எனக்கு இதுபோதுமே
வேறென்ன வேணும் நீ போதுமே
(மூங்கில் தோட்டம்....)

குளத்தாங் கரையிலே
குளிக்கும் பறவைக
சிறகு உலத்துமே
துளிக தெறிக்குமே

முன்கோபம் விடுத்து
முந்தானை எடுத்து
நீ மெல்ல துடிக்க
நான் உன்ன அணைக்க

இதுபோதும் எனக்கு இதுபோதுமே
வேறென்ன வேணும் நீ போதுமே
இதுபோதும் எனக்கு இதுபோதுமே
வேறென்ன வேணும் நீ போதுமே

மரங்கள் நடுங்கும்
மார்கழி இருக்க
ரத்தம் உறையும்
குளிரும் இருக்க

உஷ்ணம் யாசிக்கும்
உடலும் இருக்க
ஒத்த போர்வையில
இருவரும் இருக்க

இதுபோதும் எனக்கு இதுபோதுமே
வேறென்ன வேணும் நீ போதுமே
இதுபோதும் எனக்கு இதுபோதுமே
வேறென்ன வேணும் நீ போதுமே

மூங்கில் தோட்டம்
மூலிகை வாசம்
நெறஞ்ச மௌனம்,
நீ பாடும் கீதம்
பௌர்ணமி இரவு -
பௌர்ணமி இரவு
பனிவிழும் காடு -
ஒத்தையடி பாதையில்
உன்கூட பொடிநட

இதுபோதும் எனக்கு இதுபோதுமே
வேறென்ன வேணும் நீ போதுமே



## அஜ்மலுக்கு ஏமாற்றம்!

கோ படத்தில் வில்லனாக நடித்த அஜ்மல் சமீபத்தில் நாயகனாக நடித்த கருப்பம்பட்டி படத்தை ரொம்பவே எதிர்பார்த்தார். ஆனால் படம் கைகொடுக்கவில்லை. அதனால் இனி தமிழ், தெலுங்கு படங்களுக்காக போராடி காலத்தை வீணடிக்க விரும்பாத அஜ்மல் தன் தாய்மொழியான மலையாளத்தில் முழு நேர நடிகராக முடிவு செய்துள்ளார். அத்தோடு தமிழில் தொடர்ந்து வில்லன் வேடங்களில் நடிக்க ஆர்வம் இருப்பதாகவும் கூறி வருகிறார்.

## பொதுச் சேவையில் ஹன்சிகா!

நன்றாகப் படிக்கும் ஏழைக் குழந்தைகளாக தேடிப்பிடித்து தத்தெடுத்து வருகிறார் ஹன்சிகா. அவர்களை சந்திக்கும்போது எதிர்காலத்தில் எந்த துறையில் சிறந்து விளங்க விருப்பம் உள்ளது என்று கேட்டறியும் ஹன்சிகா அதற்கு அனைத்து உதவிகளையும் செய்வதாக சொல்லி தட்டிக் கொடுக்கிறார். மேலும் இதுவரை மும்பை குழந்தைகளை மட்டுமே தத்தெடுத்து வந்த ஹன்சிகா அடுத்து சென்னையிலும் அதைச் செயல்படுத்த உள்ளார்.



## வழி மாறும் கஞ்சா கருப்பு!

தன் கொமெடி மார்க்கெட் சரிந்து விட்டதால் வேல்முருகன் போர்வெல்ஸ் என்ற படத்தில் முக்கியமான வேடத்தில் நடித்து வருகிறார் கஞ்சா கருப்பு. மேலும் இப்படத்திலிருந்து தன் வழியை மாற்றியுள்ள கஞ்சாகருப்பு தொடர்ந்து கண் கலங்க வைக்கும் குணசித்ர வேடங்களிலும் நடிக்க விரும்பி தன் விருப்பத்தை சென்டிமென்ட் இயக்குனர்களிடமும் வெளிப்படுத்தி வருகிற அவர்.




## சிம்புவுக்கு திருமணம்!

தனுஷ், ஜெயம் ரவி, ஜீவா, கார்த்தி என தமிழ் சினிமாவின் இளம் ஹீரோக்கள் எல்லோரும் திருமணமாகி குழந்தை குட்டி என்று இல்லற வாழ்க்கையில் செட்டிலாகி விட அந்த வரிசையில் புதுமாப்பிள்ளையாகப் போகிறார் நடிகர் சிம்பு.

நடிகர் சிம்புவின் கைவசம் தற்போது வாலு, வேட்டை மன்னன் ஆகிய இரண்டு படங்கள் மட்டுமே இருக்கின்றன. இதையடுத்து அவர் ''மன்மதன் 2 ஆம் பாகத்தை டைரக்ட் செய்து நடிப்பதாகவும் தகவல் வந்துள்ளது. ஆனாலும் புதிய படங்கள் எதையும் அவர் இன்னும் ஒப்புக்கொள்ளவில்லை.

இது குறித்து அவர் தெரிவிக்கையில்:- என்னையும் சில நடிகைகளையும் இணைத்து கிசுகிசுக்கள் வந்தன. ஆனால் அனைத்தும் பொய்யாகி விட்டது. அப்பாவும் அம்மாவும் எனக்கு மணப்பெண் தேடும் விஷயத்தில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். அவர்கள் பார்க்கும் பெண்ணை திருமணம் செய்வேன் என்றார் சிம்பு.

அநேகமாக அடுத்த வருடத்துக்குள் சிம்புவின் திருமணம் நிச்சயமாகிவிடும் என்று சொல்கிறார்கள். மணப்பெண் வேலூர் என்றும் சிம்புவின் சொந்தக்கார பெண் என்றும் சொல்கிறார்கள்.



## எமியின் தொழில் பக்தி!

மதராசப்பட்டினம் மற்றும் தாண்டவம் படங்களில் நடித்த போது தமிழில் சிறு சிறு வசனங்கள் பேசக் கூட பயந்த எமி ஜாக்சன் ஐ படத்தில் மிகப் பெரிய வசன காட்சிகளில் கூட அபாரமாக நடிக்கிறார். அந்த அளவுக்கு தமிழ் வசனங்களை புரிந்து கொள்ளும் ஆற்றல் பெற்று விட்ட எமி பெரிய அளவிலான வசன காட்சிகள் என்றால் முதல் நாளே வசனத்தை மனப் பாடம் செய்து விட்டு வருகிறார். அவரது தொழில் பக்தி யூனிட்டையே ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது.

## சிபிராஜ் ரீ-என்ட்ரி!



சில ஆண்டுகளாகவே எந்தப் படத்திலும் நடிக்காமல் இருக்கும் சிபிராஜ் யாராவது பெரிய இயக்குனர்கள் மூலம் ரீ-என்ட்ரி கொடுக்க முயற்சி செய்தார். ஆனால் அவர் அழைப்புக்கு யாருமே செவி சாய்க்கவில்லை. அதனால் தற்போது புதிய இயக்குனர்களிடம் தீவிரமாகக் கதை கேட்டு வரும் சிபிராஜ் அந்தப் படத்தை தானே தயாரிக்கவும் திட்டமிட்டுள்ளார்.



## சம்பளமின்றி குத்தாட்டம் போட்ட நயன்தாரா



நயன்தாரா, தனுஷ் தயாரிக்கும் எதிர்நீச்சல் படத்தில் சம்பளம் வாங்காமல் குத்தாட்டம் போட்டுள்ளார். தனுஷ் சிவகார்த்திகேயன், ப்ரியா ஆனந்த் நடிக்கும் எதிர்நீச்சல் படத்தை தயாரித்து வருகிறார். இந்தப் படத்தில் ஒரு பாடலுக்கு குத்தாட்டம் போட வேண்டும் என்று தனுஷ் நயன்தாராவை கேட்டுள்ளார். நயனும் உடனே ஓ.கே. சொல்லிவிட்டார். அதற்கு காரணம் தனுஷ் தன் நண்பர் என்பது தான். நண்பன் தனுஷுக்காக சம்பளமின்றி குத்தாட்டம் போட்டுள்ளார் நயன்.



## ஏழைகளுக்கு உதவுங்கள்!

### அஜித் வேண்டுகோள்...!

எதிர்வரும் மே 1- ஆம் திகதி தனது பிறந்தநாளை யொட்டி தனது இரசிகர்களுக்கு வேண்டுகோள் ஒன்றை விடுத்திருக்கிறார் அஜித். நிஜ வாழ்க்கையில் இப்படித்தான் இருக்க வேண்டும் என்று பல பேருக்கு முன்னுதாரணமாக இருந்து வருகிறார் அஜித். தமிழ்த் திரையுலகின் முன்னணி ஹீரோக்களே அவருக்கு இரசிகர்களாக இருக்கும் பட்சத்தில் அவரது இரசிகர்கள் அவரது நடிப்புக்காக மட்டுமில்லாமல் அவரது நல்ல குணத்திற்காகவும் இரசிகர்களாக இருக்கின்றனர். இந்நிலையில் அஜித்தின் பிறந்தநாளை பேனர் அடிப்பது, போஸ்டர் ஒட்டுவது ஆகிய வேலைகளை செய்து விமரிசையாகக் கொண்டாட இரசிகர்கள் திட்டமிட்டு வருகிறார்கள். ஆனால் இப்படி பணத்தை வீணாக்காமல் இல்லாதவர்களுக்கும் ஏழை மாணவர்களின் படிப்பிற்கும் அந்தப் பணத்தை கொடுத்து உதவி செய்யுங்கள் என்று கோரிக்கை விடுத்திருக்கிறாராம் அஜித்.

இதுகுறித்து சமீபத்தில் பேசியிருக்கும் அஜித், பேனர்கள் அடித்து பணத்தை வீணாக்காமல் இல்லாதவர்களுக்கு கொடுத்து உதவுங்கள். மேலும் உணவு, படிப்பு இல்லாமல் பல குழந்தைகள் வாடுகிறார்கள். தயவுசெய்து அவர்களுக்கு பணத்தை செலவு செய்து உதவுமாறு என் இரசிகர்களை கேட்டுக்கொள்கிறேன் என்று கூறியிருக்கிறார்.



## பாடல்



திரைப்படம்:- ரெட்
இசை:- தேவா
பாடியவர்:- டிப்பு
பாடல் வரி:- வைரமுத்து

தாய் மடியே உன்னைத் தேடுகிறேன்
தாரகையும் உருக வாடுகிறேன்
பத்துத் திங்கள் என்னை சுமந்தாயே
ஒரு பத்தே நிமிடம்
தாய் மடி தா தாயே
நீ கருவில் மூடி வைத்த
என் உடம்பு நடுத்தெருவில்
கிடக்கிறது பார்த்தாயோ
உதிரம் வெளியேறும் காயங்களில்
என் உயிரும் ஒழுகும் என்னை
பார்த்தாயே தெய்வங்கள்
இங்கில்லை உன்னை
அழைக்கிறேன்
(தாய் மடியே உன்னை)

விண்ணை இடிக்கும் தோள்கள்
மண்ணை அளக்கும் கால்கள்
அள்ளிக் கொடுத்த கைகள்
அசைவிழந்த தென்ன

காணல்கள் தின்னும் கண்கள்
கனிந்து நிற்கும் இதழ்கள்
உதவி செய்யும் பார்வை
உயிர் குறைந்ததென்ன
பாரதப் போர்கள்
முடிந்த பின்னாளும்
கொடுமைகள் இங்கே
குறையவில்லை ஏசுகள் என்றோ
மாண்ட பின்னாலும்
சிலுவைகள் இன்னும்
மரிக்கவில்லே
(தாய் மடியே உன்னை)

படை நடத்தும் வீரன்
பசித்தவர்கள் தோழன்
பகைவருக்கும் நண்பன்
அழுக்கில் அவன் என்ன
தாய்ப் பாலாய் உண்ட இரத்தம்
தரை விழுந்ததென்ன
இவன் பேருக்கேற்ற வண்ணம்
நிலம் சிவந்ததென்ன
தீமைகள் என்றும்
ஆயுதம் ஏந்தி
தேர்களில் ஏறி வருவதென்ன
தர்மங்கள் என்றும்
பல்லக்கில் ஏறி தாமதமாக
வருவதென்ன
(தாய் மடியே உன்னை)

# சிறுவனின் புத்திசாலித்தனம்



அரசர் ஒருவருக்கு திடீரென்று ஒரு நாள், தன் பட்டத்து யானை எவ்வளவு எடை இருக்கும் என்று அறிய ஆவல் ஏற்பட்டது. அந்தக் காலத்தில் எடைமேடைகள் எல்லாம் இல்லை; யானையை அளக்கும் அளவுக்குப் பெரிய தராசும் கிடையாது. யானையின் எடையை எப்படி அறிவது? என்று அமைச்சர்களிடம் கேட்டார் மன்னர். யாருக்கும் அதற்கான வழி தெரியவில்லை. அப்போது அமைச்சர் ஒருவரின் பத்து வயது மகன், ''நான் இதன் எடையைச் சரியாகக் கணித்துச் சொல்கிறேன்'' என்றான். அதைக் கேட்டு அனைவரும் சிரித்தனர். ஆனால், அவனுக்கும் ஒரு வாய்ப்பு கொடுத்தார் மன்னர். அந்தச் சிறுவன், யானையை நதிக்கு அழைத்துச் சென்றான். அங்கே இருந்த மிகப் பெரிய படகில் யானையை ஏற்றினான். யானை ஏறியதும், தண்ணீரில் ஆழ்ந்தது படகு. உடனே அவன், தண்ணீர் நனைத்த மட்டத்தைப் படகில் குறியீடு செய்தான். பிறகு, யானையைப் படகிலிருந்து இறக்கி, பெரிய பெரிய கற்களைப் படகில் ஏற்றச் சொன்னான். முன்பு குறித்து வைத்திருந்த குறியீடு அளவுக்குப் படகு தண்ணீரில் மூழ்கும் வரை, கற்கள் ஏற்றப்பட்டன. பின்பு, அரசரிடம் அந்தக் கற்களைக் காட்டி, ''அவற்றின் எடைதான் அந்த யானையின் எடை'' என்றான். அனைவரும் வியந்தனர். அவனது புத்திசாலித்தனத்தைப் போற்றிப் புகழ்ந்தனர்.

எல்லோரும் யானையை ஒட்டுமொத்த உருவமாகத்தான் பார்த்தார்கள். ஆகவே, அவர்களால் அதன் எடையைக் கணிக்கமுடியும் எனும் நம்பிக்கை வரவில்லை. ஆனால் அந்தச் சிறுவனோ, பல எடைகளின் கூட்டுத்தொகையே யானையின் எடை என்று எண்ணிச் செயல்பட்டான்; எளிதில் விடை கண்டான்.

எவ்வளவு பெரிய செயலாக இருந்தாலும், அதைச் சின்னச் சின்ன செயல்களாகப் பிரித்துக்கொள்ளவேண்டும். பிறகு, அந்த ஒவ்வொரு செயலையும், செவ்வனே செய்து முடிக்கவேண்டும். அப்போது, ஒட்டுமொத்தத் திட்டமும் அழகாக நிறைவேறிவிடும்.



## ஜப்பானின் பூஜி மலைப்பகுதி

உலகிலேயே மிகவும் சன நெருக்கடி மிகுந்த சுறுசுறுப்பான, ஆரவாரமிக்க நகரம் ஜப்பானின், ''டோக்கியோ'' என்று கூறுவர். ஆனால், ஒரு மணி நேரப் பயணத்தில் உலகின் செந்தர்யமிக்க சுவர்க்க பூமியான, மலைச் சரிவுகள், பள்ளத்தாக்குகள், ஏரிகள், நீர் வீழ்ச்சிகள், வெண்னீர் ஊற்றுக் குளியல்கள், பரந்த சமவெளிகள் இத்தனையும் கொண்ட ஒரு இடத்துக்கு போய் விடலாம்! அது தான் பூஜி மலைப்பகுதி. புனிதமானதும், எரிமலையைக் கொண்டதும், ஜப்பான் நாட்டின் சின்னமாக விளங்குவதும், சூரியன் தினமும் இதன் பின்னால் உதயமாவதும், பூஜி மலையின் சிறப்புக்கள்.

ஜப்பானின் மிக உயரமான மலை பூஜி (12,388 அடிகள்) பல நூற்றாண்டு களாக ஓவியர்களும், கவிகளும் அதன் முழு அழகையும் வடிக்க முடியாமல் திணறி இருக்கின்றனர். 1707 இல் இது (எரிமலை) குமுறி ஏற்படுத்திய அழிவு பயங்கரம். பூதாகாரமான இந்த எரிமலை வாயின் குறுக்களவு 1,700 அடிகள், ஆழம் 700 அடிகள். தன் வாழ்நாளில் ஒரு தடவையாவது இம்மலை மீது ஏறி விட வேண்டும். ஸ்தல யாத்திரை போல என்று ஒவ்வொரு ஜப்பானியனும் ஆசைப்படுவான். இதன் உச்சிக்கு அருகே நிறைய தங்கும் விடுதிகள் உள்ளன. சூரியோதயத்தை காணவே, நிறையப் பேர் போகின்றனர்.

ஜப்பானின் சின்னம் பூஜி மலை. டோக்கியோ ரயில்வே இதன் வழியாகப் பாய்ந்து செல்வது போல விளம்பரப்படுத்துவது நவீன ஜப்பானிய பாணி. இந்தப் புகழ் பெற்ற ரயில் மணிக்கு 135 மைல் வேகத்தில் செல்லக் கூடியது.

# இந்த வார குட்டீஸ்



பெயர்:-வில்லியம் வெரோனியல்ஸ்
பெற்றோர்:- சகாயராஜ், தேவநேசம்
இடம் :- கொழும்பு 14.



பெயர்:-கவிந்திரன்(கஜன்)
பெற்றோர்:- விஷ்ணுகுமார், இந்திராணி.
இடம் :- சோனகம வுணுகலை.



## சுழன்று ஆடினால் தலை சுற்றுவது ஏன்?

குட்டீஸ், நீங்கள் தன்னைத்தானே சுற்றி விளையாடுவதை பெரிதும் விரும்புவீர்கள். ஆனால் சில நிமிடங்கள் சுற்றி முடித்ததும், உங்களுக் குத் தலைசுற்றுவதுபோல உணர்வுவரும். அது ஏனென்று தெரியுமா? நம்முடைய காதுகளில் ஒலி அதிர்வை அறியும் சிறு எலும்பு, காதுக்குள் திரவத்தில் மிதந்தபடி இருக்கிறது. நாம் வேக மாகச் சுழன்று ஆடும் போது, அந்த திரவத்தில் சீரற்ற அலைகள் ஏற்படு வதால் அது குழப்பமான நிலையாக மூளையால் உணரப்படுகின்றது. எனவேதான் தலைசுற்றுவது போல வும், உடல் சமநிலை பெறாமல் இருப்பதாகவும் உணர்கிறோம்.

அமெரிக்கா, கனடா நாடு களில் மஞ்சள் நிற ராபின் குருவியை அதிக அளவில் பார்க்கமுடியும். தற்போது இப் பறவையை இங்கிலாந்து மக்கள் தங்களது நாட்டின் பெரும்பாலான இடங்களில் பார்க்கமுடியும்.

அவர்களில் பெரும்பாலானோர் இந்தக் குருவி நமது நாட்டிற்கு எப்படி வந்தது என்று புரியாமல் குழம்பினார்கள். வட அமெரிக்காவில் கடந்த சில மாதங்களாக வீசிய சூறாவளிக் காற்றில் இந்தப் பறவை, அட்லாண்டிக் கடலையும் தாண்டி வந்திருப்பது தெரிந்தது.

காற்றின் போக்கிலேயே இங்கிலாந்து வந்து சேர்ந்த மஞ்சள் வயிற்று ராபின் குருவிகள் தற்போது தங்களின் புதிய இடத்தில் எந்தவித ஆபத்துமின்றி வாழ்கின்றன.



## மஞ்சள் நிற குருவி

# புதைந்து கிடந்த பங்களா

4 ஆயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய பங்களா ஒன்று பூமிக்கடியில் புதைந்து கிடந்தது சமீபத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

தெற்கு ஈராக்கில் இந்த கட்டிடம் புதைந்து கிடந்தது. பழங்காலத்தில் யு.ஆர். என அழைக்கப்பட்டுள்ளது.

இந்த பங்களா 260 அடி நீளம் உள்ளது. கட்டிடத்தின் 2 பக்கமும் கால்பந்து மைதானமும், மிகப்பெரிய முற்றம் மற்றும் பல அறைகள் அமைந்துள்ளன.

மான்செஸ்டர் பல்கலைக்கழக தொல்லியல் ஆய்வாளர் சமீபத்தில் இந்த பங்களாவைக் கண்டுபிடித்தார். இங்கிருந்து இந்தியா மற்றும் அரபு நாடுகளில் வணிகம் நடந்ததாக கருதப்படுகிறது. மேலும் 9 செண்டிமீற்றர் நீளமுள்ள ஒரு பழமையான சிற்பமும் கிடைத்துள்ளது. மேலும் ஆய்வு நடந்து வருகிறது.

3)  4) 

09) முகுந்தன் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்ததால் களிப்பில் மூழ்கி இருந்தான். இந்நிகழ்ச்சிக்குப் பொருத்தமான முக பாவனை?

1)  2) 

3)  4) 

10) பறக்கும் பாலூட்டி.

1) வண்ணத்துப்பூச்சி 2) வௌவால்
3) அந்து 4) இராமபாணம்

11) "காட்டுக்கோழியை" தேசிய பறவையாகக் கொண்ட நாடு எது?

1) இந்தியா 2) இலங்கை
3) இந்தோனேசியா 4) ஈரான்

12) மூங்கில் தளிரை உணவாகக் கொண்டது.

1) துருவக்கரடி 2) பண்டாக்கரடி
3) புலி 4) மான்

13) அயடீன் குறைபாட்டால் ஏற்படும் நோய்.

1) கண்டமாலை 2) மாலைக்கண்
3) இரத்தச் சோகை 4) குவாசியக்கோர்

14) ஒரு தற்காலிகத் தையலாக, மடித்த மடிப்புக் குலையாமல் இருப்பதற்கு மட்டும் தைக்கும் அடிப்படைத் தையல் எது?


1) சிறுநூலோடி 2) பெருநூலோடி
3) சோம் 4) விஸ்பம்

15) யாப்பகூவ சிங்கம் அமைந்துள்ள நகரம் எது?


1) கம்பளை 2) அநுராதபுரம்
3) குருநாகல் 4) கண்டி

( 15 x 1 = 15 புள்ளிகள் )

*11) பின்வரும் படங்களை இனங்கண்டு அவற்றின் பெயர்களை எழுதுக.*

1)  2) 

______ ______

3)  4) 

______ ______

*12) பின்வரும் பிரசினங்களைத் தீர்க்குக.* ( 4 x 1 = 4 புள்ளிகள் )

01) நளினிக்கு 6 இனிப்புகள் கிடைக்கும்போது குமாருக்கு 4 இனிப்புகள் கிடைக்கும். குமாருக்கு 4 இனிப்புக்கள் கிடைக்கும்போது சுனிலுக்கு இரண்டு இனிப்புகள் கிடைக்கும். பையிலுள்ள 600 இனிப்புகளை மேலுள்ள விபரத்தின்படி பகிர்ந்தளிக்கும் போது குமாருக்குக் கிடைக்கும் இனிப்புகள் எத்தனை?

______

02) அருனிடம் ஒரு தொகைப்பணம் இருந்தது. அதனுடன் ரூபா 188.00 யினைக் கூட்டினால் அருனிடம் ரூபா 1880.00 இருக்கும். எனின் அருனிடம் ஆரம்பத்தில் இருந்த பணம் எவ்வளவு?

______


03) 2.5m நீளமான கயிறொன்றினை சமனான 9 துண்டுகளாக வெட்டிய பின்னர் 70cm நீளமான கயிற்றுத் துண்டொன்று மிகுதியாகக் காணப்பட்டது. சம அளவாக வெட்டப்பட்ட 9 துண்டுகளில் ஒரு துண்டின் நீளம் எவ்வளவு?

______


04) 450g நிறைகொண்ட பிஸ்கட் பைக்கற்றுக்கள் 2, 5kg நிறை கொண்ட அரிசிப் பைக்கற்று 1, 250g நிறைகொண்ட தேயிலைப் பைக்கற்றுக்கள் 2, 500g நிறைகொண்ட சீனிப் பைக்கற்று 1 என்பவை அடங்களான பொதியொன்றின் முழு நிறை எவ்வளவு?

______

05) உருவில் காட்டப்பட்டுள்ளது ஒரு உடைந்து போன ஒரு சென்ரிமீற்றர் அளவுடைய கோலாகும்.




இப்பென்சிலின் நீளம் எவ்வளவு ? ______

6) 


1) இவ்வுருவின் சுற்றளவு யாது?

______

2) நிழற்றப்பட்ட பகுதியின் பரப்பளவு யாது?


______

07) முன் எண் எண் பின் எண்

_______ 30000 _______

08) உருவில் உள்ள தராசின் தட்டு A யில் ஒரு குண்டும் தட்டு B யில் 1kg ம் படிக்கல் ஒன்றும் உள்ளன. உரு வில் உள்ள தகவல்களைப் பயன்படுத்தி பின்வரும் வாக்கியத்தைப் பூரணப்படுத்துக.

குண்டின் நிறை 1kg இலும்





_______________

09) ஒரு தோட்டத்தில் 4730 தேங்காய்களும் இன்னொரு தோட்டத்தில் 4891 தேங்காய்களும் பறிக்கப்பட்டன. இரு தோட்டங்களிலும் பறிக்கப்பட்ட மொத்தத் தேங் காய்கள் எவ்வளவு?

_______________

10) திங்களன்று 4107 பயணிகள் புகையிரத நிலையத்திற்கு உள் வந்தனர். அதேதினம் 2359 பயணிகள் வெளியேறி னர். உள்வந்த பயணிகள் எண்ணிக்கை வெளியேறிய பயணிகள் எண்ணிகையை விட எவ்வளவு அதிகம்?

_______________




11) களஞ்சியம் ஒன்றினதும் களஞ்சியம் இரண்டினதும் உள்ள மூட்டைகளின் எண்ணிக்கை எவ்வளவு?

_______________


12) நான்கு களஞ்சியங்களினதும் கூட்டுத்தொகை எவ் வளவு?

_______________

13) 5m நீளமுள்ள ஒரு நாடாவில் இருந்து ஒவ்வொன்றும் 20cm நீளமுள்ள 5 துண்டுகள் வெட்டப்பட்டன. நாடா வின் எஞ்சியுள்ள பகுதியின் நீளம் யாது?

_______________

14)




பின்வரும் இரு பற் சக்கரங்களி லும் A சக்கரத்தில் 90 பற்களும் B சக்கரத்தில் 18 பற்களும் காணப்ப டுகின்றன. எனின் A சக்கரம் ஒரு முறை சுழலும் போது B எத்தனை முறை சுழலும்?

_______________

15) ஜூலை மாதத்தில் 5387 தேங்காய்களும் ஒகஸ்ட் மாதம் 6021 தேங்காய்களும் ஒரு தோட்டத்தில் பறிக்கப்பட் டன. ஜூலை மாதத்தில் பறித்த தேங்காய்களின் எண் ணிக்கை ஓகஸ்ட் மாதம் பறித்த தேங்காய்களின் எண் ணிக்கைக்குச் சமமாக வேண்டுமாயின் ஓகஸ்ட் மாதம் பறித்த தேங்காய்களில் எத்தனை தேங்காய்களை நீக்க வேண்டும்?

_______________

16) கீழே உள்ள அட்டவணையை அவதானித்து விடை தருக.

| மாதம் | பெண்கள் ஆடை | ஆண்கள் ஆடை |
|---|---|---|
| ஜனவரி | 1532 | 1375 |
| பெப்ரவரி | 836 | 911 |
| மார்ச் | 2462 | 2458 |
| மூன்று மாதத்தில் மொத்தம் | | |

1) முதற்காலாண்டில் பெண்களின் ஆடைகளின் எண் ணிக்கை எவ்வளவு?

_______________

2) மார்ச் மாதம் ஆண்கள், பெண்களின் உடைகளின் மொத்த எண்ணிக்கை யாது?

_______________

17) இரு மாபிள் பைக்கற்றுக்களில் ஒன்றில் 572 மாபிள்க ளும் மற்றையதில் 612 மாபிள்களும் உள்ளன.

1) ஒன்றை விட மற்றையதில் எத்தனை மாபிள்கள் கூடு தலாக உள்ளன?

_______________

2) இரு நண்பர்களுக்கு சம எண்ணிக்கையான மாபிள் கள் கொடுக்க வேண்டுமெனின் கூடுதலாக உள்ள பைக்கற்றில் இருந்து குறைவாக உள்ள பைக்கற்றுக் குள் எத்தனை மாபிள்கள் இடவேண்டும்?

( 17 x 2 = 34 புள்ளிகள் )

13) பின்வரும் தலைப்பை நன்கு வாசித்து அதற்கேற்ப சரி யான எழுவாய், பயனிலைகளுடன் ஒரு வாக்கியத்தில் ஐந்து சொற்களுக்குக் குறையாமல் ஆறு வாக்கியங்கள் எழுதுக.

**எனது வீட்டு முற்றத்தில் ஒரு மரத்தில் ஒரு குருவி கூடு கட்டி இருந்தது. ஒரு நாள் அதன் குஞ்சு கீழே விழுந்து துடித்துக் கொண்டிருந்தது. எறும்புகள் குஞ்சை நோக்கி வந்தன. உடனே நான் ..................**

1) _______________

2) _______________

3) _______________

4) _______________

5) _______________

6) _______________


( 6 x 2 = 12 புள்ளிகள் )

21] சமுத்திரத்தில் எப்போதும் காணக்கூடியவற்றை உள்ளடக்கிய விடையைத் தெரிவு செய்க.

1] மீன், மீனவர், கரை 2] நீர், அலை, மீன்

3] கப்பல், அலை, புயல் 4] அலை, மீன், மீனவர்

★ தரப்பட்டுள்ள வினாக்கள் பின்வரும் பாதை வரிப்படத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளது. அதில் A, B, C, D, E என்பன ஐந்து நகரங்களாகும். அவற்றுக்கு இடையிலான தூரம் உருவில் காட்டப்பட்டுள்ளது.




22] A யிலிருந்து E க்குச் செல்வதற்கான மிகக் குறுகிய பாதையின் தூரம் யாது?

1] 17Km

2] 18Km

3] 20Km

23] A யிலிருந்து பயணத்தை ஆரம்பித்த சாந்தன் B ஊடாகவும் காந்தன் C ஊடாகவும், விமலன் D ஊடாகவும் E யை அடைந்தனர். அவர்களின் வேகங்கள் சமனாயின், இப்பயணத்துக்கு மிகக் கூடிய நேரத்தை எடுத்தவர் யார்?

1] சாந்தன்

2] காந்தன்

3] விமலன்

★ **கீழே தரப்பட்டுள்ள மூன்று படிமுறைகளின் கீழ் கட்டடம் ஒன்றைக் கட்டத் திட்டமிடப்பட்டிருந்தது.**

| படிமுறை | எடுக்கும் காலம் |
|---|---|
| 1 | 2 ஆண்டுகள் |
| 2 | படிமுறை 1 இன் இரண்டு மடங்கு |
| 3 | படிமுறை 1 இன் மூன்று மடங்கு |

24] 2000 ஆம் ஆண்டில் கட்டடம் கட்டத் தொடங்கப்பட்டது எனின், எந்த ஆண்டில் அது கட்டி முடிக்கப்படும்?

1] 2010

2] 2011

3] 2012

25] எல்லா அதிபர்களுக்கும் பொதுவான இயல்பு எது?

1] தினமும் 6 மணித்தியாலங்கள் பாடசாலை தொடர்பான சேவையில் ஈடுபடுதல்

2] ஏதேனுமொரு பாடசாலையில் கடமையாற்றுதல்

3] அதிக எண்ணிக்கையான மாணவர்களை வழி நடத்திக் கொண்டிருத்தல்

★ **பின்வரும் கூற்றை வாசித்து 26ஆம், 27ஆம் வினாக்களுக்குரிய விடையைத் தெரிவு செய்க.**

பாலன் ஆண்பிள்ளை ஆவான். பாலனின் அக்காவிற்கு மூன்று ஆண் சகோதரர்களும் மூன்று சகோதரிகளும் உள்ளனர்.

26] பாலனுக்கு எத்தனை ஆண் சகோதரர்கள் உள்ளனர்?

1] 3

2] 2

3] 1

27] பாலனுக்கு எத்தனை சகோதரிகள் உள்ளனர்?

1] 2

2] 3

3] 4

28] □ x □ = ◯ , □ இன் பெறுமானம் யாது?

◯ + ◯ = 8 எனின்

1] 2

2] 4

3] 3

29] அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு.

1] தேனாக இருந்தாலும் அளவாகவே உண்ண வேண்டும்

2] நஞ்சை அளவுக்கு அதிகம் உண்ணக்கூடாது

3] நஞ்சாக இருந்தாலும் அளவாகவே உண்ண வேண்டும்

★ **30ஆம், 31 ஆம் வினாக்களிலுள்ள இடைவெளிக்குப் பொருத்தமான சொல்லை தந்துள்ள விடைகளிலிருந்து தெரிவு செய்க.**

30] நீதிமன்றம் – சட்டத்தரணி எனின்,
வைத்தியசாலை – ...................

1] மருந்து

2] நோயாளி

3] வைத்தியர்

31] கடலுக்கு – நீர் எனின்,
பாலைவனத்திற்கு – ...........................

1] மணல்

2] ஒட்டகம்

3] எண்ணெய்

★ **கீழே காணப்படும் பந்தியில் உள்ள ஒவ்வொரு வெற்றிடத்திற்கும் வரவேண்டிய மிகப் பொருத்தமான சொல்லை, 32 தொடக்கம் 34 வரையான வினாக்களில் தரப்பட்டுள்ள சொற்களில் இருந்து தெரிவு செய்க.**

| |
|---|
| வேகமாக வந்த [1] ................ ஒன்றில் மோதிய மனிதன் [2] ..................... மத்தியில் வீசி எறியப்பட்டான். அவனுக்கு சுயநினைவு இருக்கவில்லை. அவனது நிலை [3] ..................... என விளங்கியதனால் உடனடியாக அண்மையிலுள்ள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டான். |

32] 1ஆவது வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்

1] கடிதம்

2] வாகனம்

3] சப்தம்

33] 2ஆவது வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்

1] பாதை

2] வானம்

3] பூமி

34] 3ஆவது வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்

1] மகிழ்ச்சிக்குரியது

2] சாதாரணமானது

3] கவலைக்குரியது

★ **பின்வரும் தொடர்கள் குறிக்கும் தனிச் சொல்லைத் தெரிவு செய்க.**

35] ஆடு மாடு மேய்ப்பவன்

1] பாகன்

2] வலவன்

3] இடையன்

36] ஒரே பாடசாலையில் தொடர்ந்து ஒரே வகுப்பில் கல்வி கற்றவர்கள்

1] தோழர்கள்

2] சகபாடிகள்

3] ஒருசாலை மாணாக்கர்

37] பின்வரும் ஒவ்வொரு வினாவிலும் சம்பவம் ஒன்றின் ஐந்து சந்தர்ப்பங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றின் சரியான ஒழுங்கைக் காட்டும் விடையினைத் தெரிவு செய்க.

A – இரை தேடி உண்டது

B – அதிகாலை ஆனது

C – மரக்கிளைகளில் தங்கி சற்று ஓய்வெடுத்தது

D – கூட்டை விட்டுப் பறந்தது


E – சூரியன் மறைவதற்குள் கூடு நோக்கிப் பறந்தது

1] B, D, C, E, A

2] C, D, B, A, E

3] B, D, A, C, E

★ பாடசாலை ஒன்றில் தரம் 1 இல் 2004 தொடக்கம் 2008 வரை அனுமதிக்கப்பட்ட பிள்ளைகள் பற்றிய விபரம் கீழுள்ள வரைபில் தரப்பட்டுள்ளது




38] 2007 இல் அனுமதிக்கப்பட்ட பிள்ளைகளின் மொத்த எண்ணிக்கை யாது?

[..............................]

39] 2009 ஆம் ஆண்டு அனுமதிக்கப்படுவார்கள் என எதிர்பார்க்கக்கூடிய பிள்ளைகளின் மொத்த எண்ணிக்கை எவ்வளவாக இருக்கும்?

[..............................]

உரிய முறையில் சொற்கள் பிரித்து எழுதப்படாத வாக்கியங்கள் தரப்பட்டுள்ளன. அவ்வாக்கியங்களில் உள்ள சொற்களை உரிய முறையில் பிரித்துக் கருத்துள்ள வாக்கியங்களாக்கி எழுதுக.

40] இலங் கைஎ ருவ ளம்மிகு ந்தநாடு.

**முக்கிய குறிப்பு**

**இவ்வினாப்பத்திரம் மாணவரால் சுயமாக பயிற்சி செய்து விடையளிக்கப்பட்டதென்பதை அதிபரின் உறுதிப்படுத்தலுடன் எமக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். அவ்வாறு அனுப்பி வைக்கப்படாத வினாப்பத்திரங்கள் எம்மால் நிராகரிக்கப்பட்டு பெறுபேறுகள் பத்திரிகையில் பிரசுரிக்கப்படமாட்டாது.**

**பொறுப்பாசிரியர்**

**அதிபரின் உறுதிப்படுத்தல்**

**மேற்குறித்த மாணவன் / மாணவியால் இவ்வினாப்பத்திரம் சுயமாக விடையளிக்கப்பட்டதென்பதை உறுதிப்படுத்துகின்றேன்.**

..............................

**பதவி முத்திரையுடன் அதிபர் உறுதிப்படுத்தல்**

# அட அவ்வளவும் தங்கம் தாங்க!



தங்கம் விலை குறைஞ்சிடுச்சி. ஆனா வாங்கக் கையில் பணமில்லையே என நடுத்தரவர்க்க மக்கள் பெருமூச்சுவிட்டுக் கொண்டிருக்கும் நிலையில் தங்கத்தால் நகை மட்டுமல்ல ஆடையும் அணிந்து ஆச்சரியத்தில் வாய்பிளக்க வைக்கிறார் இந்தியாவைச் சேர்ந்த தத்தா பூகி. இவரை எல்லோரும் எப்படி அழைக்கிறார்கள் தெரியுமா? ''தங்க மனிதன்''

இவரைப் பார்த்தாலே தெரியும் இந்த பெயருக்கு தகுதியானவர் என்று. கை, கால் என்று உடல் முழுவதும் தங்கத்தால் எந்நேரமும் ஜொலித்துக் கொண்டிருக்கும் மனிதர். அதுமட்டுமல்ல உலகில் விலைமதிப்புள்ள தங்கத்தால் செய்த ஆடை அவரிடம்தான் உள்ளது.



அவரிடம் நீங்கள் ஏன் இவ்வளவு தங்க நகைகள் அணிகிறீர்கள்? என்று கேட்டபோது தத்தா சொன்ன பதில் ''இது என்னுடைய கனவு'' என்றார்.

மேலும் தத்தா கூறுவது :- உலகில் பிறந்த ஒவ்வொரு மனிதனுக்கும் விருப்பங்கள், இலட்சியங்கள் இருக்கும். ஆனால் என்னுடைய ஒரே கனவு லட்சியம் எல்லாமே தங்கம் மட்டுமே. என்னுடை கனவை நனவாக்கும் வகையில்......? ரூபா செலவில் 3.3 கிலோ எடையுள்ள தங்கத்தால் ஆனா ஆடையை தயாரித்து அணிகிறேன்.

இந்த ஆடையை நான் சில முக்கியஸ்தர்களை சந்திக்க செல்லும் நேரங்களிலே அணிந்து செல்வேன். அவ்வாறு செல்லும்போது பாதுகாப்பிற்காக சிலரை நியமித்துள்ளேன்.

மேலும் இந்த தங்கத்தால் செய்யப்பட்ட ஆடையை வடிவமைத்தது ரன்கார் என்ற நகைக் கடைதான். இவ்வாறான ஆடையை வடிவமைப்பது என்பது சாதாரண விடயமல்ல. அணு அணுவாக பார்த்து செதுக்கி வடிவமைக்கப்பட்ட ஆடை இது. வெளிப்பகுதி தங்கமாக இருந்தாலும் அதனை உடுத்துவது சற்று கடினமாக இருக்கும் என்பதால் ஆடையின் உட்பகுதியில் வெல்வெட் துணி பொருத்தப்பட்டு ஆடை வடிவமைக்கப்பட்டுள்ளது.

இதனை நான் அணியும்போது என் ஆழ்மனதில் இனம்புரியாத மகிழ்ச்சியும் பெருமிதமும் ஏற்படும். பணமும் நகையும்தான் முக்கியம். இது இரண்டும் இருந்தால் அவன்தான் கோடீஸ்வரன் என்பதை நான் சிறுவயதில் இருந்து கேட்டிருக்கிறேன். இந்த விடயம் என் ஆழ்மனதில் பதிந்துவிட்டது. நான் இருபது வயதில் இருந்தே நகைபோட ஆரம்பித்து விட்டேன்.

நான் ஒரு பணக்கார குடும்பத்தில் பிறந்தவன் அல்ல. பிறந்தது பூனே நகரில். வட்டிக்கு பணம் கொடுக்கும் தொழிலைத் தொடங்கினேன். இந்த தொழிலில் கிடைத்த இலாபத்தில்தான் இத்தனை நகைகளும் வாங்கினேன்.

நான் வாங்கும் நகைகள் அத்தனையும் அசல் தங்கம். என்றாவது ஒரு நாள் இவற்றை விற்கவேண்டிய நிலை வரும்போது என்னுடைய ஆடையையும் சேர்த்து விற்கத் தயங்க மாட்டேன்.

நான் என்னுடைய மனைவிக்கு கொடுத்த பரிசு தங்கத்தால் செய்த கைப்பை (hand bag ) ஒன்று. அத்தோடு 500 கிலோ பெறுமதியான தங்கத்தை கொடுத்திருக்கிறேன் என்று சொல்லி பெருமிதம் அடைகிறார். தங்கத்தால் ஒரு மொபைல் போனும், இரண்டு ஜோடி செருப்பும் செய்து அணிவதுதான் என்னுடைய இலக்கு என்கிறார் தத்தா.

ம்... கொடுத்து வைத்தவர்.

— ஜி.வி.எஸ்

## இனி உலகம் அழிந்தால் பரவாயில்லை, மனிதன் வாழ இரண்டு கிரகங்கள் கண்டுபிடிப்பு

விண்வெளி குறித்து ஆய்வு மேற்கொள்ள கெப்லர் 62 விண்கலத்தை அமெரிக்காவின் நாசா மையம் அனுப்பியுள்ளது. அதில் பொருத்தப்பட்டுள்ள அதிசக்தி வாய்ந்த டெலஸ் கோப் விண்வெளியை துல்லியமாக போட்டோ எடுத்து பூமிக்கு அனுப்பி வருகிறது.

இந்த நிலையில் சமீபத்தில் அனுப்பி வைத்துள்ள போட்டோவில் பூமியை போன்று 2 கிரகங்கள் உள்ளன. அவற்றில் பாறைகள், வானம், கடல்கள் மற்றும் ஈரத்தன்மையுள்ள காற்று போன்றவை உள்ளன.

எனவே, இவை மனிதர்கள் வாழ முற்றிலும் தகுதியானவை என தெரிய வந்துள்ளது. அது பூமியில் இருந்து 1200 ஒளி வருட தூரத்தில் உள்ளன. அதே நேரத்தில் புதன் கிரகத்தில் இருந்து 3 கோடியே 70 லட்சம் கி.மீற்றர் தூரத்திலும்,



வியாழன் கிரகத்தில் இருந்து 6 கோடியே 50 லட்சம் கி.மீற்றர் தூரத்திலும் உள்ளது. மேலும், அங்கு உயிரினங்கள் வாழத் தகுதியுடைய தட்பவெப்ப நிலை நிலவுவதாகவும் ஆய்வில் தெரிய வந்துள்ளது. சூரியனை விட சிறியதாகவும், மங்கலாகவும் அவை காணப்படுகின்றன. இந்த 2 புதிய கிரகங்கள் கண்டு பிடிக்கப்பட்டது குறித்து கெப்லர் விண்கல ஆய்வு திட்ட தலைவர் வில்லியம் போருக்கு மகிழ்ச்சி தெரிவித்துள்ளார். கெப்லர் டெலஸ்கோப் கண்டுபிடித்துள்ள பல கிரகங்களில் இது மிகவும் பயனுள்ளது என்றார். இப்புதிய கிரகங்கள் கண்டுபிடிக்கப்பட்டதை பிட்சா மற்றும் பீர் விருந்துடன் விஞ்ஞானிகள் கொண்டாடி மகிழ்ந்தனர்.

அப்போ இனி உலகம் அழிந்தால் இந்த கிரகத்திற்கு சென்று தஞ்சமடைந்து விட வேண்டியதுதான்.

# “உங்க பாட்டுக் கேட்டேன் ரொம்ப நல்லா இருந்திச்சு”

கீபோர்ட் வாத்தியக் கலைஞராக அறிமுகமாகி தனக்கென்று இசைத்துறையில் முத்திரை பதித்துவரும் ஓர் துடிப்புள்ள அமைதியான கலைஞர். சினிமா சாராத இசைப்பயணத்தில் தன்னைத் தனித்துவமாக அடையாளப்படுத்தத் துடிக்கும் இசையமைப்பாளர், சவுன்ட் எஞ்சினியர், பாடலாசிரியர், பாடகர், வாத்தியக் கலைஞர், மொழிபெயர்ப்பாளர், குரல்பதிவுக் கலைஞர், நிகழ்ச்சித் தயாரிப்பாளர் என பல திறமைகளை தன்னகத்தே கொண்டவர். இன்றையகால இசை இரசிகர்களுக்கு இரசனைகளுக்கு ஏற்ப இசையினை வழங்கி அசத்திவருபவர்.

அவர்தான் இலங்கை இசைத்துறையில் 15 வருடகால மாக வலம் வரும் டிரோன் பெர்னாண்டோ.

அவர் இவ்வாரம் பேஸ்புக் பகுதியில் இணைகிறார்.

**★ உங்கள் இசைப் பயணம் பற்றி ?**

சாதாரண இசை இரசிகனாக இருந்து பிறகு அதுவே இசை வாசிக்கும் கலைஞனாக மாறி பிறகு இசையமைப்பில் வந்து நின்றது. பள்ளி நாட்களிலேயே ஆரம்பித்துவிட்ட எனது இசைப்பயணம் உயர்தரப் பரீட்சையின் பின்னா் தொழில் ரீதியான பயணமானது. கீபோர்ட் வாத்தியக் கலைஞனாக இசைக்குழுக்களில் வாசிக்க ஆரம்பித்த நான் படிப்படியாக இசைத்துறைக்கான தொழில்நுட்பம் மற்றும் இசையையும் கற்றுக்கொண்ட பின்னர் படிப்படியாக இசை அமைத்தலில் ஈடுபடத் தொடங்கினேன்.

**★ நவீன இசைத் துறையில் ஏற்பட்டுள்ள புதிய மாற்றங்கள் பற்றி நீங்கள் கூற விரும்புவது?**

இசைத்துறையில் நாளுக்கு நாள் தொழில்நுட்பம் வேகமாக வளர்ந்து வருகிறது. இசை மட்டும் கற்கும் காலம் போய் இப்போது இசையோடு சேர்ந்து தொழில்நுட்பமும் கற்க வேண்டிய காலம் வந்துவிட்டது.







இதற்கு ஈடு கொடுத்து இலங்கையிலும் இன்றைய இசைக் கலைஞர்கள் பிரமிக்கும் வகையிலான படைப்புகளை தந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால், அவர்களுக்கு



உரிய வெளிப்பாடு இன்னமுமே கிடைக்கவில்லை என்பது தான் கவலைக்குரிய விடயம்.

**★ உங்களது மற்றுமொரு படைப்பான “Dimensions” என்ற இசைத்தொகுப்பு பற்றி?**

“Dimensions” என்பது முற்றுமுழுதாக எனது தயாரிப்பில் வெளியான எனது இசைத்தொகுப்பு. இலங்கை மற்றும் இந்தியக் கலைஞர்களின் பங்களிப்போடு உருவான இத்தொகுப்பு. இது எனக்கு ஒரு அடையாளமாக இன்றுவரை இருந்து வருவதில் பூரண திருப்தி. இந்த இசைத்தொகுப்பு என் இசை வாழ்கையின் மிக முக்கியமானதொரு வெளியீடாகும்.

**★ இந்தியக் கலைஞர்களோடு இணைந்து பணியாற்றிய அனுபவங்கள் பற்றி கூறுங்கள்?**

என்னைப் பொறுத்தவரையில் இலங்கையில் பணியாற்றிய கலைஞர்களுக்கும் இந்திய கலைஞர்களுக்கும் இடையில் வேறுபாடு பார்ப்பதில்லை. இருக்கும் இடம் மட்டுமே வேறு... பிரபலத்தின் அடிப்படையில் மாறுபாடுகள் இருக்கின்றன.

**★ இசை மட்டுமல்லாது இன்னும் உங்களிடம் உள்ள பல திறமைகள் பற்றியும் கூறுங்களேன்?**

அடிப்படையில் இசைக்கலைஞனாக என்னை நான் இனம் காட்டினாலும் ஊடகம் சம்பந்தமான பல துறைகளில் என் பங்களிப்பு இருக்கிறது. பத்திரிகைத்துறை, விளம்பரத்துறை, பின்னணிக் குரல்கொடுத்தல் என பல துறைகளில் பங்களிப்புச் செலுத்தி வருகிறேன்.

**★ வளர்ந்துவரும் படைப்பாளிகள், கலைஞர்களுக்கு நீங்கள் வழங்கும் பங்களிப்புக்கள் பற்றி...?**

நான் எனது இசை மட்டுமன்றி இலங்கைத் தமிழ் இசை வளர என்னால் முடிந்த அத்தனையும் செய்து வருகிறேன். தகுந்த இளைஞர்களைத் தெரிவுசெய்து அவர்களுக்கு இசைத் தொழில்நுட்பம் கற்பித்து வருகின்றேன். அத்தோடு ஏனைய கலைஞர்களுக்கும் அவர்களது படைப்புகளில் தேவையான பங்களிப்புகளைச் செய்து வருகின்றேன்.

இசைக் கலைஞர்களைப் பொறுத்தவரை அவர்களும் மனிதர்கள் என்பதால் ப்ளஸ் மைனஸ் கட்டாயம் இருக்கும். அவற்றை பெரிதுபடுத்தாமல் என்னோடு ஒத்துப்போகின்றவர்களை இன்று அடையாளம் கண்டு அவர்களுடன் என் இசை முயற்சிகளை மேற்கொண்டு வருகிறேன்.

**★ உங்களுடைய ‘ஸ்ருதி’ இணைய வானொலி பற்றிக் கூறுங்களேன்?**

ஆம், ஸ்ருதி இணைய வானொலியானது சினிமா இல்லாத தமிழ் படைப்புகளுக்கானது, படைப்பாளிகளுக்கானது. உலகிலுள்ள சுயாதீனமான தமிழ் கலைஞர்களின் படைப்புகளோடு நடாத்தப்படும் இணைய வானொலியாகும்.

**★ இறுதியாக, நீங்கள் சாதிக்க நினைக்கும் துறை எது?**

இசைத்துறையிலே அதிகமான பங்களிப்பு இருப்பதால் சாதிக்க விரும்பும் துறையும் அதுவாகவே இருக்கிறது. காலத்தால் அழியாத படைப்புகளை உருவாக்குவதன் மூலம். அது சினிமாவாகவும் இருக்கலாம். இல்லாமலும் இருக்கலாம். எந்த வடிவிலாவது நல்ல படைப்புகள் பெயர் சொல்லும்படியாக உருவாக வேண்டும்.

**★ உங்களுக்குப் பிடித்த இசையமைப்பாளர்கள் யார்?**

இளையராஜா, ஏ.ஆர்.ரஹ்மான்.

**★ உங்கள் ப்ளஸ் எது? மைனஸ் எது?**

ப்ளஸ் - ஊடகத்துறையின் எல்லா பகுதிகளிலும் ஏதோ ஒரு வகையில் பங்களிப்பு செய்வது

மைனஸ் - அநேகமான நேரங்களில் வியாபாரநோக்கமின்றி செயல்படுவது.

**★ உங்கள் சாதனைகள், வெற்றிகள், விருதுகள் பற்றியும் கூறுங்கள்?**

சாதனைகள் என்று ஒரு பட்டியலிட இன்னும் நான் நீண்ட தூரம் செல்ல வேண்டியிருக்கிறது. என் பாடலுக்குக் கிடைக்கும் விமர்சனங்கள் வரவேற்புகளை வெற்றிகளாகக் கருதுகிறேன். “உங்க பாட்டுக் கேட்டேன் ரொம்ப நல்லா இருந்துச்சு” என்று கிடைக்கும் பாராட்டுகளே மனதில் சுமக்கத்தக்க உண்மையான விருதுகள். அப்படியான



விருதுகள் அடிக்கடி கிடைப்பதில் திருப்தி.



**★ இன்றைய இளைஞர்களுக்கு கூற விரும்புவது?**

வெறுமனே மென்பொருளை மட்டும் நம்பி இசையை அமைக்காமல், இசையை முறையாக நிறைய கற்பதற்கு ஆசைப்படுங்கள்.

எஸ்.பிரியதர்ஷினி



# உயிர் கொடுத்த பெற்றோரின் உயிர் குடித்த பிள்ளைகள்!

தங்களுடைய குழந்தைகளின் சந்தோஷத்திற்காக பெற்றோர்கள் தங்களால் முடிந்த அனைத்தையும் செய்கிறார்கள். குழந்தை எதையேனும் விரும்பி அழும்போது அதை எத்தனை கஷ்டங்களுக்கு மத்தியிலும் பெற்றுக் கொடுக்கும் பெற்றோர் எம்மத்தியில் அதிகம்.

ஆனால், அந்தக் குழந்தை பெரியவர்களானதும் எல்லாவற்றையும் மறந்து தாம் விரும்பியதை அடைவதற்காக பெற்றவர்களையே மறந்து போகும் பிள்ளைகள் எம் சமூகத்தில் வேண்டியளவு இருக்கின்றார்கள்.

இந்நிலையில் தன்னுடைய சந்தோஷத்திற்காக பெற்ற மகளால் தந்தைக்கும், தாய்க்கும் இழைக்கப்பட்ட கொடுமையான சம்பவமொன்று அண்மையில் மட்டக்களப்பில் இடம்பெற்றுள்ளது.

மட்டக்களப் செங்கலடி பிரதேசத்தைச் சேர்ந்த சிவகுரு ரகு (47 வயது) என்ற வர்த்தகரும், அவருடைய மனைவி சுந்தரமூர்த்தி விப்ரா (வயது 41) என்பவரும் அண்மையில் கொடூரமான முறையில் படுகொலை செய்யப்பட்டனர்.

இக் கொலைக் குற்றவாளிகளை அத்தனை இலகுவில் பிடிக்க முடியவில்லை. காரணம் இச்சம்பம் நன்கு திட்டமிட்டு யாரும் மாட்டிக்கொள்ளாத வகையில் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இருப்பினும் இக் கொலைச் சம்பவம் இடம்பெற்று ஒரு வாரத்திற்குள் கொலையுடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தக் கொலைகள் தொடர்பாக வெளிவந்துள்ள தகவல்கள் ஆச்சரியம் மிக்கவை, ஜீரணிக்க முடியாதவை.

இந்தக் கொலைக்கான அம்பு குடும்பத்தின் உதவியுடனேயே எய்யப்பட்டிருக்கிறது என்ற சந்தேகம் பொலிஸாருக்கு இருந்தாலும், அதை ஒரு துருப்பாக வைத்து பல்வேறு வியூகங்களை வகுத்து பொலிஸார் மேற்கொண்ட விசாரணையிலிருந்து கொலைக்கான காரணம், கொலை நடந்த விதம் என பல திடுக்கிடும் தகவல்கள் அம்பலத்திற்கு வந்தன.

(பொலிஸாரின் விசாரணையில் கிடைத்த தகவல்களை இங்கே தருகிறோம்)

செங்கலடி பகுதியில் சிவகுரு ரகு, விப்ரா தம்பதியருக்கு வைஷ்ணவி (வயது 21), தக்ஷனா (வயது 16) என இரு புதல்விகள். இவர்கள் அளவுகடந்த பாசத்துடன் பிள்ளைகளை பராமரித்தனர்.

சாதாரணமாக வர்த்தகத்தை ஆரம்பித்த சிவகுரு ரகு அயராத உழைப்பால் நல்ல நிலைக்கு வந்தார்.

**சம்பவ தினத்தில்...**

மாலை 5.30 மணி... புத்தாடை வாங்குவதற்காக அனைவரும் புறப்பட்டனர். வேனில் பின் பக்க ஆசனத்தில் அமர்ந்திருந்த இளைய மகள் தனது காதலனுடன் (அஜந்த்) குறுந்தகவல் மூலம் தொடர்பில் இருந்துள்ளார்.

இவர்கள் ஒன்றும் காதல் உரையாடல் நடத்திக் கொள்ளவில்லை. மாறாக கொலைக்கான திட்டமிடலில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள். அதுவும் தன்னைப் பெற்று வளர்த்து பாசத்தைக் கொட்டிய அன்னையையும் தந்தையையும் கொலை செய்வதற்கான திட்டமிடலில் ஈடுபட்டிருந்தார்கள்.

அந்த 16 வயதான சிறுமி குறுந்தகவல் மூலம் வீட்டில் யாரும் இல்லாத விடயத்தையும், சாவி இருக்கும் இடத்தையும் தன் காதலனுக்கு தெரிவித்துள்ளார்.

காதலியின் தகவலையடுத்து அஜந்தும் அவனது நண்பனும் வீட்டிற்குள் புகுந்து தூக்க மாத்திரைகளையும், பரசிட்டமோல் வில்லைகளையும் கறிக்குள் கலந்து விட்டுச் சென்றனர்.

நகருக்குச் சென்ற குடும்பம் வீடு திரும்புவதற்கு 7 மணியாகி விட்டது. கறி கசப்பதாகக் கூறி தந்தை சாப்பாட்டை கொட்டிவிட, தூக்க மாத்திரைகள் கலந்த உணவை தாய் சிறிது உட்கொண்டார்.

பின்னர் இருவரும் நித்திரைக்குச் சென்று விட்டனர்.

நொடிக்கொரு முறை இங்கு நடக்கும் அனைத்து விடயங்களையும் காதலனுக்கு குறுந்தகவலினூடாக சொல்லிக் கொண்டிருந்தாள் தக்ஷனா.

தக்ஷனாவின் தகவல்களுக்கமைய அஜந்த் தன் நண்பர்கள் இருவரை அழைத்துக் கொண்டு பாடசாலை பைக்குள் கத்தி, முகமூடி, கையுறை என அனைத்தையும் எடுத்து வைத்துக் கொண்டு தக்ஷனாவின் வீட்டுக்குச் சென்றான்.

வீட்டிற்கு வந்தவர்களை தக்ஷனா கதவைத்திறந்து பெற்றோரின் அறையை காண்பித்துள்ளார். அந்த அறையில் மின் குமிழ் அணைக்கப்பட்டிருந்ததால் தொலைபேசி வெளிச்சத்தில் தக்ஷனாவின் தாயையும், தந்தையையும் சரமாரியாகத் தாக்கி கொலை செய்துவிட்டு தப்பியுள்ளனர்.

இவ்வாறான நிலையில் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த முக்கிய தகவல்களின்படி கொலையுடன் தொடர்புடைய அனைவரும் கைது செய்யப்பட்டனர்.

தன்னுடைய சந்தோஷத்திற்காக இத்தனை காலம் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் பெற்று பாலூட்டி சீராட்டி வளர்த்த பெற்றோர்களைக் கொல்லுமளவு பிள்ளைகள் துணிந்துள்ளார்களா என்ற கேள்வி அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது.

இந்த அதிர்ச்சியை ஜீரணிப்பதற்குள் இன்னுமொரு அசம்பாவிதம் நிகழ்ந்துள்ளது.

புல்மோடை மஹசின்புர பகுதியிலேயே இரட்டைக் கொலை இடம்பெற்றுள்ளது. கணவனும் மனைவியும் ஒரே நேரத்தில் இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளனர்.

மஹன்சிபுர பகுதியில் வசிக்கும் எச்.எம்.சூரியபண்டாரவும் அவருடைய மனைவியுமே இவ்வாறு கொல்லப்பட்டவர்கள்.

இவர்களின் மரணத்திற்கும் இவர்களின் பிள்ளைகளே காரண கர்த்தாக்களாகிப் போயுள்ளனர்.

சூரியபண்டாரவின் மூத்த மகளுக்கும் சிறிது காலத்திற்கு முன் இவர்களின் வீட்டிலிருந்தவருக்கும் இடையில் தவறான தொடர்பு இருப்பதை அறிந்தவர்கள் அதற்கு எதிராக செயற்பட்டதன் விளைவாக கொடுக்கப்பட்ட தண்டனையே இது.

இவ்வாறு தமக்கு உயிர் கொடுத்த பெற்றோர்களின் உயிரையே குடிக்கும் அளவிற்கு பிள்ளைகள் துணிந்துள்ளார்கள் என்பதைப் பார்க்கும்போது எமது சமூகத்தின் எதிர்காலம் எப்படியானதொரு வளர்ச்சிப் பாதையில் சென்று கொண்டிருக்கிறது என்பதை தமக்குத் தாமே ஊகித்துக் கொள்ள முடியும் என்பதில் சந்தேகமில்லை.

**எஸ்.மேகலா**




# நான் தோற்று விட்டேன் அம்மா

தடுமாற்றம் நிறைந்த மனதுடன் ஏரங்கா தொலைபேசியை கையில் எடுத்து அழைப்பை ஏற்படுத்தினாள். மறு முனையில் அவளது சகோதரி.

"அக்கா எனக்கு வாழ்க்கையே வெறுத்து விட்டது. பிரச்சினைகளுக்கு எல்லையே இல்லை. இந்த முறையும் புத்தாண்டுக்கு எனது அப்பாவை பார்க்க ஊருக்கு வரமுடியவில்லை. நான் வாழ்வதில் அர்த்தமே இல்லை அக்கா"

ஏரங்காவின் தடுமாற்றம் நிறைந்த வார்த்தைகளை கேட்ட சகோதரி "கவலைப்படாதே. யார் இல்லாவிட்டாலும் நான் உன்னுடன் இருக்கிறேன். நீ பஸ்ஸில் ஏறி வெல்லவாயவுக்கு வா பணம் இல்லாவிட்டால் பஸ் நடத்துநரிடம் சொல்லிவிட்டு வா. நீ இங்கு வந்திறங்கியதும் பணம் கொடுக்கிறேன்" என்றாள்.

சகோதரியின் இந்த ஆறுதல் வார்த்தைகளுக்கு ஏரங்கா செவிசாய்க்கவில்லை.

"அக்கா நான் இப்போது பண்டாரவளை ரயில் நிலையத்தில் இருக்கிறேன். இன்னும் சற்று நேரத்தில் இந்த உலகை விட்டு போகப் போகிறேன். எனக்கு வாழ்க்கையே வெறுத்து விட்டது."

"நீ எங்கும் போக வேண்டியதில்லை. என்னிடம் வா. முட்டாள் தனமான வேலையை செய்யாதே" என்றாள். ஆனால், சகோதரியின் வார்த்தைகளுக்கு எந்த பதிலும் இல்லை. மாறாக ரயில் சக்கரமும் தண்டவாளமும் மோதிக்கொள்ளும் பாரிய சத்தமொன்று கேட்டது. ஏரங்காவின் குரல் ஓய்ந்தது.

அப்போ எனது தங்கைக்கு என்ன நடந்தது என்று அலறினாள் சகோதரி.

நிலை குலைந்துபோன ஏரங்காவின் மூத்த சகோதரன் தங்கைக்கு என்ன நடந்தது என்ற பதற்றத்தில் பண்டாரவளையிலுள்ள தனது நண்பர்களுடன் தொடர்பு கொண்டு விசாரித்தான். எந்தத் தகவலும் இல்லை. இதனையடுத்து பண்டாரவளை பொலிஸுக்கு விடயத்தைக் கூற விரைந்து செயற்பட்ட பொலிஸார் பண்டாரவளை ரயில் நிலையத்திற்குச் சென்றனர்.

பொலிஸார் அங்கு சென்றபோது எல்லாமே முடிந்திருந்தது.

காலை 9.55 இற்கு பண்டாரவளையிலிருந்து கொழும்பு நோக்கி வந்த ரயிலின் முன் பாய்ந்து யுவதியொருவர் தற்கொலை செய்து கொண்டதாக ரயில் நிலையத்தில் இருந்தவர்கள் தெரிவித்தனர்.

இதனையடுத்து பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில் தற்கொலை செய்து கொண்டவர் பண்டாரவளை பகுதியைச் சேர்ந்த 24 வயதுடைய ஏரங்கா என தெரியவந்தது.

ஏரங்கா தற்கொலை செய்து கொண்டதற்கான காரணத்தை கண்டறிவதற்கான விசாரணைகளை பொலிஸார் ஆரம்பித்தனர்.

முதலில் ஏரங்காவின் கணவனை கண்டுபிடித்து விசாரணைகளைத் தொடர்ந்தனர்.

அய்யோ சேர்! ஏரங்கா எத்தனை மணிக்கு ரயில் நிலையத்திற்கு சென்றாள் என்று எனக்குத் தெரியாது. நான் அப்பாவி. கூலி வேலை செய்துதான் இருவரும் வாழ்க்கை நடத்தினோம். திருமணம் முடித்து 2 வருடங்களாகின்றன. ஏரங்காவின் சொந்த ஊர் பலாங்கொடை. அவளின் தாய் இறந்த பின்னர் அவளின் தந்தையும், தங்கையும், அண்ணாவும் அந்த வீட்டில் வசிக்கின்றனர். இம்முறை புத்தாண்டிற்கு எப்படியாவது தனது தந்தையை பார்க்க பலாங்கொடைக்கு செல்ல வேண்டுமென என்னிடம் கூறினாள். ஆனால், அவளை பலாங்கொடைக்கு கூட்டிச் செல்வதற்கு என்னிடம் பஸ்ஸுக்குக் கூட பணம் இல்லை. இதனால் பிறகு செல்வோம் என நான் அவளிடம் கூறினேன். ஆனால் அதற்கு அவள் ஒத்துக் கொள்ளவில்லை. அன்றிலிருந்து என்னுடன் சண்டை பிடித்துக் கொண்டிருந்தாள்.

நகைகூட எம்மிடம் இல்லை, அடகு வைத்தாவது பணம் பெறுவதற்கு. என்னிடம் பணம் இருந்திருந்தால் எப்படியாவது அவளை பலாங்கொடையிலுள்ள அவளது தந்தையை பார்க்க அழைத்துச் சென்றிருப்பேன் என கண்ணீர் மல்க கூறினான்.

ஏரங்காவின் கணவன் சஞ்சீவ இவ்வாறு கூறிக் கொண்டிருக்கையில் ஏரங்காவின் மூத்த சகோதரி தெரிவித்தது வேறொரு கதை.

தங்கை எனக்கு இன்று காலை 9.15 மணியளவில் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு அழுதாள். அவளுக்கு பிரச்சினைகள் இருந்தன. தங்கையின் கணவன் உழைக்கும் ஒரு சதத்தைக்கூட மிச்சம் வைப்பதில்லையாம். உழைக்கும் பணத்தை குடித்து அழிப்பதாக நிறைய தடவைகள் அயலவர்கள் என்னிடம் தெரிவித்தனர் என சகோதரி கண்ணீருடன் கூறினார்.

இதனையடுத்து பொலிஸார் ஏரங்காவின் வீட்டை சோதனை செய்த போது ஏரங்காவினால் இறந்துபோன தனது தாய்க்கு எழுதப்பட்ட கடிதமொன்றையும் பொலிஸார் எடுத்துள்ளனர்.

அக் கடிதத்தில் "அம்மா நீங்கள் ஏன் என்னை விட்டுச் சென்றீர்கள்? 24 வருடங்களாக கட்டிவைத்திருந்த கனவுகள் யாவும் சிதைந்து விட்டன. எனக்கு வாழ்க்கை வெறுத்து விட்டது. நான் வாழ்க்கையில் தோற்று விட்டேன் அம்மா" என அக் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தது.

மகள் தனது தாய்க்கு எழுதிய கடிதத்தை கையில் எடுத்த தந்தையும் ஏரங்காவின் தங்கையும் கட்டியணைத்து கதறி அழுவதை பார்த்து அங்கு கூடியிருந்தவர்களின் கண்களிலும் கண்ணீர் வடிந்தது.

தனது சொந்த ஊருக்குச் சென்று தந்தையைப் பார்ப்பதற்குக் கூட தன்னால் முடியவில்லையே என்ற ஏக்கத்தினாலும், குடிகாரக் கணவனிடம் இருந்து சென்றுவிட வேண்டும் என்ற எண்ணத்தினாலும் சித்திரை புத்தாண்டு பிறப்பதற்கு ஒரு நாளுக்கு முன்பாகவே அவள் இந்த உலகைவிட்டு சென்று விட்டாள்.

அவள் இன்று உயிரோடு இருந்திருந்தால் சில வேளை மலர்ந்துள்ள புத்தாண்டு அவளுக்கு எல்லாவித நன்மைகளையும் கொண்டு வந்திருக்கக் கூடும்.

**மேகலா ரமேஷ்**
**(நன்றி மௌபிம)**

## சகியே!

ஒவ்வொரு அசைவிலும்
என்னை வருடிவிட்டு
விழிகளால் மெல்ல என் இதயத்தை
திருடிவிட்டு சென்றாய்
இன்று யாருமில்லா ஊரில்
குருடனாய்த் திரிகின்றேன் ஏனோ!
உன்னால் தானே!

ஜே.பிரதீப், பூண்டுலோயா.

## கண்ணாடி


கண்ணாடியில்
நான் பார்த்த
போதெல்லாம்
பிடித்தபடி நடந்திடும்
என் விம்பம்
நீ தந்த காயங்களால்
அழகாகத்
தோன்றவில்லை
உனக்காக நானிருக்க
வாய்ப்பு கொடு
என்றது கண்ணாடி

ஏ.எப்.சஹானா, நிந்தவூர்.

## இதயம்

இதயம் எத்தனை முறை
காயப்பட்டாலும்
மனதுக்கு பிடித்த உன்னை
மறக்காது காரணம்
இதயத்துக்கு
நடிக்கத் தெரியாது
துடிக்க
மட்டுமே தெரியும்

பிரகாஷ், ஹொப்டன்.



## உன்னோடு நானும்

அனைத்துக்குமே பொறுப்பு
நான் நீ அல்ல...!
யாரோ எழுதிய தீர்ப்பின்படி
தண்டனைகளை நீ மட்டும்
அனுபவிக்கிறாய்
என் கண்களுக்குள்
நீ என்று சொல்வாய்!
உண்மைதான் அதிகம்
அழுதது நீயல்ல நான்
பார்க்க பேச சில
தடைகள் இது
விரிசல்களாய் மாறிடுமா...!
அம்மா ....!
தயவு செய்து உன்
தனிவழிப்பயண பாதையில்
என் கைகளையும்
உன்னோடு இணைத்துக்கொள்!

அ.கேதீஸ், அக்கரப்பத்தனை.

## என்னவளின் டயரி

வெறும் காகிதத்தால்
ஆன டயரி
என்னவளின் பொன்னான
வார்த்தைகளை சுமந்ததால்
பொன்னை விடவும்
பெறுமதியாகித்தான் போனது.

எம்.யூ.அல்சாத், ஓட்டமாவடி.



## கருவிழிகளை காணவில்லை

என் கருவிழிகளை நீ
கடந்ததிலிருந்து
காணவில்லை
விசாரித்துப் பார்த்ததில்
தெரிந்தது
உன் கருவிழிகளையும்
காணவில்லை என்று
காரணம்,
நம்
கருவிழிகள் நான்கும்
இடம்மாறி விட்டதென்று

அ.பிரியங்கா, அக்கரைப்பற்று.

## இதயம்

இதயம் என்பது
துடிப்பதற்கு மட்டுமல்ல
அன்பு கொண்ட உள்ளங்களை
நினைப்பதற்கும் கூட..
அதனால் தான் இன்றும்
என் இதயத்திற்கு
நின்று துடிக்கும் நேரத்தைவிட
உன்னை
எண்ணித் துடிப்பதற்கே
நேரம் சரியாகிவிடுகின்றது.

ஆர்.பிரியா, வவுனியா.

## மனிதனே!

மலர்களில் பார் நீ எத்தனை
வண்ணங்கள்....!
மனதிற்கு மகிழ்ச்சியாய் எத்தனை
மணங்கள்...!
மண்ணிலே பிறந்து மண்ணிலே
மறைந்திடும்
மனிதரில் கூடவா இத்தனை
குணங்கள்?
மண்திண்ணும் உடலை வைத்து
என்ன செய்வாய் மனிதா- நீ
கண்ணிருந்தும் குருடனாகக்
காத்திருந்தும் செவிடனாக
வாயிருந்தும் ஊமையாகக்
கையிருந்தும் முடவனாக
வாழ்ந்து மடிந்து பயனென்ன?
நீ துயரங்கள் மூலம்
அனுபவங்களை சேகரி
இதுதான் உலகமென முடிவுசெய்
இதுதான் விதிக்கப்பட்ட
பாதையென அறிந்துகொள்
இறைவனை வழிபடு
காலைமுதல் மாலைவரை
நடந்தவற்றையெல்லாம்
இரவில் மறந்துவிடு....
மறுநாள் பொழுது,
மயானத்தில் விடியாது....
அமைதியில் விடியும்

க.ரேவதி, தலாத்துஓயா.

## நீ வருவாய் என..

நீ
வருவாய் என விழிகள்..
காத்துக் கிடக்கிறது...
நீ..



## வாழ்க்கையின் பாதை

நாட்களை வாரங்கள் விழுங்க
வாரங்களை மாதங்கள் விழுங்க
மாதங்களை வருடங்கள் விழுங்கியபடி
சுழலும் காலச்சக்கர பாதையினில்
பிறப்பெடுக்கும் மனுக்களின்
வாழ்க்கை ஒரு வழிநடையாகும்
காலச்சக்கர பாதையிலே
பயணிக்கும் பாதங்களுக்கு
எங்கெங்கு ஏற்றங்கள்
எங்கெங்கு இறக்கங்கள்
எங்கெல்லாம் குன்று குழிகள்
என்பதையோர் அட்டவணையாய்
ஏற்கனவே எழுதியுள்ளான் -மனுவை
மண்ணுக்கு இறக்கிய வல்லான்
வாழ்க்கையெனும் பாதையினில்
மானிடனின் பயணம் தொடரும்
ஊழ்வினைகள் அவனைத் தொடரும்
சிசுவாய் உதித்த நாள் தொட்டு
சவமாய் உதிரும் நாட்கள் வரை
நன்மைகள் செய்தவனும் இங்கில்லை
தீமைகளை, செய்தவனும் எவனுமில்லை
இருவினைகளையும் கலந்தே செய்கின்றான்
விளைத்ததற்கேற்ப விளைவதையே
கொய்கின்றான்
வாழ்க்கையின் பாதையினில்
பயணிக்கும் மானிடம்
சுகநிலை ஆசைகளைப் பறக்கவிட்டும்
சுடுநிலையில் நடுநிலையை தவறவிட்டும்
இன்பங்களை தேடி தேடி
துன்பமெனும் மூட்டைகளையும்
பாவமெனும் மூட்டைகளையும்
முதுகினிலே சுமந்து கொண்டு
இறக்கி வைக்க வழியின்றி
விலாவென் வளைந்து விட
விழிபிதுங்கி நிற்கின்றான்
மரணமென்னும் கதவு திறக்க
காத்துக்கொண்டு நிற்கின்றான்

ஆர்.பாசமலர், கண்டி.



## அன்புத் தோழனிற்கு

எங்கோ பிறந்து எங்கோ வளர்ந்து
தாய் தந்தையின் அன்பைவிட
எனக்கு கிடைத்த அன்பு நட்பே
என்னுயிருக்குள் ஒன்றித்துப்போன
நம் உறவுக்காய்
உயிருடன் ஒன்றித்துபோன நம்
நட்பின் நினைவுகளை
நமக்குள்ளே உயிர்வாழட்டும்
ஜாதி,மதம், மொழி என்பவற்றை
கடந்து வரும் காற்றைப்போல்
நம் நட்பையும் சுவாசிப்போம்

ஜெ.சலக்ஷன், வவுனியா.

தூங்க போனால்
தூக்கம்
எனக்கில்லை...



சுபா,மட்டக்களப்பு.



## நீ நண்பியா?

இறுதிவரை நட்பில் உறுதியாய்
இருப்பாய் என்று
எத்தனையோ புதிய
நண்பர்களையெல்லாம்
நிராகரித்தேன்
உன் நட்பொன்று போதுமென்று
பள்ளத்தை நோக்கி
பாயும் நீர் வீழ்ச்சியைப் போல்
நீ அடித்துச் சென்று விட்டாய்
எல்லா நட்பையும்
ஒரு வருடத்தில் உன்னை
உற்ற நண்பியாக்கினேன்
காலமாற்றத்தால்
உருமாறாத
ஒரேயொரு உறவு "நட்பு"
உன் நட்பின் விளைவு
பெண்மேல் நட்பென்றாலே
திகட்டுகின்றது
மந்தை மேய்ப்பவனைப் போல்
உன் நட்பு
கலைப்பதும் சேர்ப்பதும்
என் நட்பா!
கண்ணாடிக் குவளையைப் போல்
உடைந்து விட்டது
கூறு கெட்ட நான்
நாறிப் போன உன் நட்பினை
புதைக்கவும் முடியாமல்
எரிக்கவும் முடியாமல்
மனதில் சுமக்கின்றேன்
எண்ணித் தவிக்கின்றேன்

மு.கா.முகம்மது அஸ்வர்,
திருகோணமலை.



## மெழுகுவர்த்திப் போல்!

நீயும், நானும்
இரவின் தனிமையில்
விழித்திருக்கிறோம்
மெழுகுவர்த்தியே!
நானும்
உனைப் போலவேதான்
நீயோ தலையில்
ஒருத்தியை
சுமந்துகொண்டு
உருகிப் போகிறாய்!
நானோ
இதயத்தில் ஒருத்தியை
சுமந்து கொண்டு
உருகிப் போகிறேன்


பா.ரிசாந்தன், ஹொப்டன்

க
வி
தை
க
ள்

உதய சூரியன் "கவிதைச்சமர்"
ஏசியன் மீடியா பப்ளிகேஷன்
இல. 68, எலிஹவுஸ் வீதி, கொழும்பு 15.
பெயர்:------------------------
முகவரி:------------------------
தொலைபேசி இல:------------------------

# நினைத்ததை முடிப்பவன்! 45

பாலா.சங்குப்பிள்ளை



அதிர்ஷ்டமென்பது சிலருக்கு சந்தோஷத்தையும் நிம்மதியையும் தரும். இன்னும் சிலருக்கு கொஞ்சகாலம் மகிழ்ச்சியினையும் கடைசி காலத்தில் கஷ்டத்தையும் வேதனையையும் தரும். அநேகமானோருக்கு அதிர்ஷ்டமும் ஆபத்தும் சேர்ந்தே வரும். வல்லவனும் பல்லவனும் அப்படித்தான். பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் தங்கக் கட்டிகள் பையுடன் மலையிலிருந்து இறங்க முற்பட்டபோது அசைந்தால் பிணமாகிவிடுவீர்களென பின்னாலிருந்து சத்தம் வரவே வல்லவன் சட்டென திரும்பினான். தூரத்தில் இருட்டில் அவர்கள் நின்றிருந்தார்கள். அவர்களில் ஒருவன் கையில் துப்பாக்கி இருந்தது. அவர்கள் வேறு யாருமல்ல. சுதர்ஷனும் சிவகுருவும்தான்.

"மிஸ்டர் வல்லவன் எங்களை ஞாபகம் இருக்கா.... நான் சிவகுரு, இவன் சுதர்ஷன்... எங்களோட வந்த வேலுமணியும், கண்ணனும் இறந்துட்டாங்க. ஆரம்பத்துல நாங்ககூட கொஞ்சம் பேய், பிசாசுன்னு பயந்துதான் போனோம். ஆனா உங்களோட கையாள் வேலுவைப் பிடிச்சோம். சித்திரவதை செஞ்சோம் உண்மைகளைக் கக்கிட்டான். நிலா, கலான்னு உங்களுக்கு ஒரே மாதிரியான தங்கச்சிமார். அதுல நிலாவை நாங்க கொன்னுட்டோம். கொழும்பிலிருந்து கடத்தி வந்த தங்கக்கட்டிகளை இங்கே பதுக்கி வச்சிருந்தோம். இங்கே சம்பளத்துக்கு வேலை செஞ்ச உன்னோட தங்கை நிலா.... நாங்க தண்ணி போட்டுட்டு மப்புல இருந்த சமயம் பார்த்து தங்கத்தை ஒளிச்சி வச்சிட்டு உங்களுக்கு தகவல் குடுத்துட்டா.... இது தெரியாம நாங்க தண்ணி போட்டதுல மயக்கம் தலைக்கேற நாலுபேரும் சேர்ந்து உன் தங்கச்சியை கதறக்கதற அனுபவிச்சோம். அதுல மூச்சு முட்டி உயிரை விட்டுட்டா. பிணத்தை பாதாளத்துல போட்டுட்டு எரிச்சிட்டோம். இதுக்கு முழு ஒத்துழைப்புத் தந்தான் வேலு. வேலுவை மடக்கி எங்களை கண்காணிக்க சொன்னதோட உன்னோட இன்னொரு தங்கை கலாவை வச்சி பேய் விளையாட்டு காட்டினீங்க... அதுல என்னோட மற்ற நண்பர்கள் அநியாயமா உயிரை விட்டுட்டானுங்க... வேலுதான் நீங்க இங்க வர்றதாகவும் தங்கத்தை எடுக்கப் போறதாகவும் சொன்னான். மறைஞ்சிருந்தோம். இப்ப பிடிச்சிட்டோம். மரியாதையா தங்கத்தைத் தந்துட்டா வாங்கிட்டுப் போயிடுவோம் இல்லன்னா முடிவு விபரீதமா இருக்கும்...."

வல்லவன் புன்னகையுடன் அவர்கள் இருவரையும் பார்த்தான்.

"எங்களோட வேலை முடிஞ்சதுக்கப்புறம்தான் உங்களுக்கு உண்மை தெரியவரும்னு நெனைச்சேன். ஆனா கொஞ்சம் சீக்கிரமாவே தெரிஞ்சிடுச்சி. உங்களை மாதிரி சமூக விரோதிகளை ஒழிச்சுக் கட்டுறதுக்காகவே ஒருத்தர் அவதரிச்சிருக்கார். நினைத்ததை முடிப்பவன்னுற பெயர்ல நம்ம சமூகத்துல கெட்டவங்களை களையெடுக்க தொடங்கினாரு. இதுக்கும் எங்களுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. நிலாவை சீரழிச்சி கொன்னதுக்காக நாங்க துடிச்சது உண்மைதான். ஆனா திட்டம் போட்டுக் காரியத்தை நடத்தினது அந்த அவதார புருஷன்தான். தங்கம் பத்தி தகவல் மட்டும் தான் நிலா குடுத்தா. வேற எதுவும் எனக்குத் தெரியாது. இதை எனக்காக நான் எடுத்துப் போகலை.... இதை வச்சி எத்தனையோ நல்ல காரியம் செய்யமுடியும்?"

"அதெல்லாம் எனக்குத் தேவையில்லை. எனக்கு என் சொத்துதான் தேவை. இதுக்காக நாங்க பட்ட கஷ்டம் கொஞ்ச நஞ்சமல்ல. அதிகநேரம் பேச நேரமில்லை...."

அப்போது எதிர்பாராத நேரத்தில் பல்லவன் அந்த தங்கத் தோல் பையை வல்லவனிடமிருந்து பிடுங்கினான். அதையெடுத்துக்கொண்டு அவர்களை நோக்கி நடந்தான். வல்லவன் இதை எதிர்பார்க்கவில்லை. ஆனால், எதுவுமே பேசவும் இல்லை. பல்லவன் அவர்களை நெருங்கினான். சிவகுரு கையில் துப்பாக்கியிருந்தது. சுதர்ஷன் அவனருகே இருந்தான். பல்லவன் ஒரே எட்டில் அவர்களை அடைந்தான். அவர்கள் இருவரும் எதிர்பாராத சமயத்தில் மின்னல் வேகத்தில் தோற்பையை அப்படியே தரையில் வைத்தவன் இருவரின் கழுத்தையும் பற்றிப் பிடித்தவாறு பள்ளத்தில் தள்ளியவாறு அவனும் பாய்ந்தான்.

மூவரும் படுபாதாளத்தை நோக்கிப் போக ஐயோ பல்லவா என அலறியவாறு வல்லவன் ஓடினான். அப்படியே தரையில் அமர்ந்தவாறு தேம்பித்தேம்பி அழத் தொடங்கினான்.

"நம்ம சமூகத்துக்கு நல்லது நடக்கணும்னுறதுக்காக நயவஞ்சகர்களை அழிக்கிறதுக்காக உன் உயிரைத் தியாகம் செஞ்சிட்டியேடா... இதெல்லாம் நடக்கப் போகுதுன்னு முன்கூட்டியே தெரிஞ்சதனால்தான் எல்லா வேலையையும் ஏற்கனவே செட்டில் பண்ணினியோ... உழைத்தவன் வீழ்ந்ததில்லை... உழைக்காதவன் வாழ்ந்ததில்லைன்னு அடிக்கடி சொல்லுவியே... நீ அதேமாதிரி வாழ்ந்து காட்டிட்டியே... ஐயோ உன்னோட இழப்பை நான் எப்படித் தாங்குவேன்...."

அவன் அந்த இரவில் யாருமில்லாத தனிமையில் வெகுநேரம் அழுது கொண்டேயிருந்தான். தங்கம் கிடைத்துவிட்டது. ஆனால் சிங்கம் செத்துவிட்டதே.

(தொடரும்...)

## இதைக் கொஞ்சம் படிங்க...!

★ இரக்கம் என்பது ஒரு வகை ஏமாற்றுதல். பிறர் துயரத்தில் துயரமும், பிறர் இன்பத்தில் மகிழ்ச்சியும் கொண்டாடுதல்தான் உண்மையான இரக்கம். ஆனால் பிறர் துயர் கண்டு இரக்கம் கொள்ளும் நாம் பிறர் மகிழ்ச்சி கண்டு ஆனந்திப்பதில்லையே.

★ செல்வ வளமும், அதன் அனுபவமும் இல்லாமல் அச்செல்வத்தின் பயனற்ற தன்மையை யாரும் உணர முடியாது.

★ ஏழைக்குத் துறவு மனப்பான்மை வருவதில்லை. ஆனால், பணக்காரனுக்கோ தான் இதுவரை சேர்த்த தெல்லாம் வீண் என்பதும், உண்மையில் இதுவரை ஒன்றும் சாதிக்கவில்லை என்பதும் புரிகிறது.

★ இன்னொருவரைப்போல இருக்க நினைப்பது இன்னொருவர் பொருளை அபகரிப்பது போன்ற திருட்டுத் தன்மை கொண்டதாகும். இன்னொருவரைப்போல நடப்பது என்பதே ஒரு போலித்தனம்.

★ ஒரு மனிதன் கோபப்படும்போது அவனைப் பார்த்து நான் சிரிக்கிறேன். ஏன் என்றால் அத்தகைய மனிதன் பிறர் குற்றத்திற்காகத் தன்னையே தண்டித்துக் கொள்கிறான் என்கிறார் புத்தர்.

★ நெருப்பில் கை வைக்க அஞ்சும் மனிதன் கோபமாகிய நெருப்பில் மட்டும் தைரியமாகக் கை வைக்கிறானே!

★ கண்ணாடியில் கூட நாம் நாமாக இருக்க விரும்புவதில்லை. நம் கற்பனை போலவே நாமும் இருக்க வேண்டும் என்று விரும்புகிறோம். எனவே தான் கண்ணாடியின் முன் முழு அலங்காரத்துடன் நிற்கிறோம்.

## இந்த வாரம் உங்களுக்கு எப்படி?

**25.04.13 முதல் 01.05.13 வரை**

| | வியாழன் | வெள்ளி | சனி | ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் |
|---|---|---|---|---|---|---|---|
| மேஷம் | வெற்றி | திடம் | உதவி | நலம் | நன்மை | வெற்றி | உற்சாகம் |
| ரிஷபம் | நன்மை | பகை | நம்பிக்கை | சாந்தம் | ஆர்வம் | போட்டி | கோபம் |
| மிதுனம் | வரவு | தடை | ஆக்கம் | ஊக்கம் | மறதி | தடங்கல் | நிம்மதி |
| கடகம் | பாசம் | வரவு | ஊக்கம் | செலவு | வெற்றி | செலவு | குழப்பம் |
| சிம்மம் | இலாபம் | அலைச்சல் | நஷ்டம் | இரக்கம் | முயற்சி | புகழ் | யோகம் |
| கன்னி | உயர்வு | பொறுமை | கவனம் | முயற்சி | அனுகூலம் | அமைதி | மேன்மை |
| துலாம் | சலனம் | ஆதாயம் | ஆதாயம் | பெருமை | ஊக்கம் | வரவு | நஷ்டம் |
| விருச்சிகம் | கீர்த்தி | சாதனை | பாராட்டு | மறதி | பொறுமை | பயம் | சாந்தம் |
| தனுசு | பயம் | பக்தி | கவலை | நன்மை | ஓய்வு | நன்மை | பரிசு |
| மகரம் | பரிவு | ஓய்வு | துன்பம் | அமைதி | பாசம் | ஆக்கம் | பாராட்டு |
| கும்பம் | சுபம் | நிறைவு | ஜெயம் | போட்டி | ஆதரவு | மகிழ்ச்சி | இலாபம் |
| மீனம் | சுகம் | இன்பம் | சாந்தம் | விவேகம் | சுபம் | எதிர்ப்பு | அமைதி |



நானு ஓயா டெஸ்ட்போர்ட் டிவிசனில் சித்திரைப் பண்டிகையை முன்னிட்டு கடந்தவாரம் எக்ஸலன்ட் இளைஞர் மன்றத்தின் ஏற்பாட்டில் சுமார் 1500 இற்கும் மேற்பட்டோருக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. சித்திரைப் பண்டிகையை முன்னிட்டு அன்னதானம் வழங்கப்பட்டது இதுவே முதல் தடவை. இவ் வைபவத்தில் தோட்ட அதிகாரி மற்றும் சுகாதாரப் பிரிவினர் பொதுமக்கள் கலந்து கொண்டனர். (படங்கள்: சந்ரு, நானுஓயா)

# கல்வியியற் கல்லூரி ஆசிரியருக்கான பட்டமளிப்பு விழா

பத்தனை ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரியில் 2009- 2011 ஆம் கல்வியாண்டில் ஆசிரியர் பயிற்சியைப் பூர்த்தி செய்தவர்களுக்கான கற்பித்தலில் தேசிய டிப்ளோமா பட்டமளிப்பு விழா எதிர்வரும் 6 ஆம் திகதி பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மண்டபத்தில் கல்வியமைச்சர் பந்துல குணவர்த்தன தலைமையில் இடம் பெறவுள்ளதாக பத்தனை ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி ஏ.சுந்தரலிங்கம் தெரிவித்தார்.

இந்தப்பட்டமளிப்பு விழா தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது :

இந்தப் பட்டமளிப்பு விழாவில் பத்தனை ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரியில் 2009- 2011 ஆம் கல்வியாண்டில் ஆசிரியர் பயிற்சியைப் பூர்த்தி செய்த 121 ஆசிரியர்களுக்கு காலை 8 மணிமுதல் நண்பகல் 12 மணிவரை இடம் பெறவுள்ள காலை அமர்வின் போது கற்பித்தலில் தேசிய டிப்ளோமா சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளன.

இந்தப்பட்டமளிப்புத் தொடர்பான அனுமதி கடிதங்கள் , அறிவுறுத்தல்கள் , பட்டமளிப்பு மேலங்கி , வாகனங்கள் நிறுத்துவதற்கான அனுமதி பத்திரம் என்பனவற்றினைப் பெற்றுக்கொள்வதற்காக சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் இம் மாதம் 29 ஆம் திகதி காலை 9 மணிக்கு கல்லூரிக்கு சமுகமளிக்க வேண்டும். அத்துடன் மேலங்கியைப் பெற்றுக்கொள்வதற்காக 1500 ரூபா கட்டணத்தினையும் 1000 ரூபா வைப்புப் பணத்திற்கான பற்றுச்சீட்டினையும் அன்றைய தினம் கொண்டு வர வேண்டும்.

**அட்டன் நிருபர் ஸ்ரீதரன்**

# நடமாடும் சேவை


எதிர்வரும் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொக்காகலை தமிழ் வித்தியாலயத்தில் விசேட நடமாடும் சேவை ஒன்று ஊவா மாகாண சமூக சேவைகள் அமைச்சின் ஏற்பாட்டில் லுணுகலை பிரதேச செயலகத்தின் ஊடாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மாகாண அமைச்சர் செந்தில் தொண்டமானின் பணிப்பின் பேரில் மேற்கொள்ளப்படவுள்ள இந் நடமாடும் சேவையில் பிறப்பு, இறப்பு திருமணச்சான்றிதழ் அங்கவீன முற்றோருக்கான உபகரணங்கள் வளங்கள் பற் சிகிச்சை, விதைவைகளுக்கான சுயதொழில் உதவிகள், முதியோர்களுக்கான விடயங்கள் சம்பந்தமான நடமாடும் சேவைகள் இடம்பெற உள்ளன.

மடுல்சீமைப்பகுதியில் மிகவும் பின்தங்கிய பகுதியான கொக்காகலை தோட்டத்தில் இவ்வாறானதொன்றை நடமாடும் சேவை ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளதையடுத்து இப்பகுதி மக்கள் தமது மகிழ்ச்சியை தெரிவிக்கின்றனர்.

இந்த நடமாடும் சேவைக்கான அனைத்து ஏற்பாடுகளும் ஊவா மாகாண சமூக சேவைகள் அமைச்சும் லுணுகலை பிரதேச செயலகமும் மேற்கொண்டுவருகின்றது.


**லுணுகலை நிருபர்**




★ தூங்கிறதுக்கு முன்னால எல்லோரும் என்ன செய்வாங்க ?
★ முழிச்சிருப்பாங்க



# கொஞ்சம் சிரிக்க சிந்திக்க





## என்ன ஒரு பயர்கு

வயதான பாட்டி வீட்டிற்கு வெளியே எதையோ தேடிக்கொண்டிந்தார். அங்கு வந்தவர் என்ன தேடிக் கொண்டிருக்கிறீர்கள்? என்றார்.
வீட்டிற்கு உள்ளே காணாமல் போன நகையை தேடிக் கொண்டிருக்கிறேன் என்றார் பாட்டி.
ஏன் வெளியே தேடிக் கொண்டிருக்கிறீர்கள் ? என்றார் அவர்.
உள்ளே மின்சாரம் இல்லை அதுதான் வெளியே தேடுகிறேன் என்றாராம் பாட்டி.




ஹலோ சொன்னதும் என்னடா உடம்பு சரியில் லையா? எனக் கேட்கும் அம் மாவிடம் தோற்கின்ற னர் உலகின் அத்தனை மருத்துவர்க ளும்...!



கடைக்காரர்: இந்தாங்க, நீங்க கேட்ட டீ
வந்தவர்: கூடவே கடிப்பதற்கு ஏதாவது இருக்கா?
கடைக்காரர்: என் நாய்தான் இருக்கு.






மனைவி: உங்களைக் கட்டிக் கொண்டதற்கு ஒரு கழுதையைக் கல்யாணம் செய்திருக்கலாம்.
கணவன்: அதுவும் சரிதான். அதுவாவது உன்னை உதைத்திருக்கும்.

ஒரு கழுதை இறந்து கிடந்தது. மதகுரு ஒருவர் அதுபற்றி நகரசபை அதிகாரிக்கு தெரிவித்தார்.
அதிகாரி:- இறந்தவர்களை அடக்கம் செய்வது உங்கள் கடமையல்லவா? என்று சொல்லிச் சிரித்தார்.

மதகுரு: ஆமாம் ஆனால், அதற்கு முன்பு இறந்தவர்களது உறவினர்களுக்கு தகவல் கொடுக்க வேண்டு மல்லவா?
அதிகாரி:- ....???






அரசியல் ஊர்வலம் ஒன்று பெரிதாக சென்று கொண்டிருந்தது. கூட்டத்தில் ஒரு தொண்டனின் பணப்பை திருட்டு போய்விட்டது. உடனே அவன் தன் தலைவரிடம் சென்று புகார் சொன்னான். தலைவர் கேட்டார், “உனக்கு யார் மீதாவது சந்தேகம் இருக்கிறதா?” என்றார்.

அவனும் தன் பக்கத்தில் ஊர்வலத்தில் வந்த ஒருவனைக் காட்டினான். நீ இங்கேயே இரு என்று தொண்டனை அமைதிபடுத்திவிட்டு கூட்டத்திற்குள் சென்ற தலைவர் சிறிது நேரத்தில் பணப்பையுடன் வந்தார்.

தொண்டன் மிகுந்த மகிழ்ச்சியில், இது தான் எனது பணப்பை. நீங்கள் கேட்ட உடன் கொடுத்து விட்டானா? என்று கேட்டான். தலைவர் சொன்னார், சத் தம் போட்டுப் பேசாதே! நான் இந்தப் பணப்பையை எடுத்தது அவனுக்குத் தெரியாது.





# பைக்கில் வந்த அமானுஷ்யம்

சிறு வயதில் பல பேய்க் கதைகளைக் கேட்டு பேய்ப்பயம் ஏற்பட்டிருந்தாலும் சிந்திக்கத் தொடங்கிய காலப்பகுதியில் பேய் என்பது வெறும் பிரமை. பேய் என்ற ஒன்றே இல்லை என்ற முடிவுக்கு வந்திருந்தேன்.

என்றாலும் எனது மகளும் மருமகனும் ஒரு சமயம் சந்தித்த அனுபவம் என் எண்ணத்தை சற்று தளரச்செய்து விட்டது.

சுமார் ஆறு வருடங்களுக்கு முன் எனது மூத்த மகளின் வாழ்க்கையில் இந்தத் திகில் சம்பவம் நடந்தது.

எனது மகள் நுவரெலியா சர்வதேச பாடசாலை ஒன்றில் ஆசிரியராக கடமையாற்றினார். அந்த பாடசாலையில் அவ்வளவு இலகுவில் விடுமுறை எடுக்க முடியாது. இருப்பினும் பி.ஏ. டிகிரி பரீட்சைக்காக கொழும்புக்கு செல்லவேண்டி இருந்ததால் வெள்ளிக்கிழமை மாலை பாடசாலையை முடித்துவிட்டு கொழும்பு செல்வதாக முடிவு செய்தார்கள்.

அதே போல் வெள்ளிக்கிழமை பாடசாலைக்குச் சென்றவள் மேலதிக வகுப்புகள் இருந்தமையால் சற்று தாமதமாகவே வீட்டுக்கு வர நேர்ந்தது. அதன் பிறகு எல்லா வேலைகளையும் முடித்துக்கொண்டு இரவு 10 மணியளவில் கணவருடன் மோட்டார் சைக்கிளில் புறப்பட்டாள்.

அதேசமயம் மருமகனுக்கும் சனிக்கிழமை நுவரெலியாவில் முக்கியமான வேலை இருந்தமையால் கொழும்பில் மகளை விட்டுவிட்டு அன்றிரவே அவரும் நுவரெலியா வரவேண்டி இருந்தது.

அந்த அவசரத்தில் மோட்டார் சைக்கிள் மின்னல் வேகத்தில் பறந்தது. கடும் இருட்டு, வீதியில் ஆள் நடமாட்டமும் இல்லை. ஆங்காங்கே ஓரிரு வாகனங்கள் புயலாக பறந்தன.

ரம்பொடை பகுதியை அண்மித்த சற்று நேரத்தில் மோட்டார் சைக்கிள் திடீரென நின்றுவிட்டது. நேரமும் இரவு 12 ஐத் தாண்டிவிட்டது. உதவி கேட்பதற்கும் யாரும் இல்லை.

இருவரும் வண்டியிலிருந்து இறங்கி சுற்றும் முற்றும் பார்த்தார்கள். வண்டியில் என்ன நடந்ததென்று கண்டுபிடிக்க முடியவில்லை. இருவரும் வீதியின் ஓரத்தில் வண்டியை நிறுத்திவிட்டு வேறு ஏதும் வாகனங்கள் வருகின்றதா என பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

கருமையான இருட்டில் கொட்டும் பனியில் இருவரும் நின்றிருக்க தூரத்தில் ஏதோ வாகனம் வருவது போன்று தெரிந்தது. சற்று நேரத்தில் மோட்டார் சைக்கிள் ஒன்று வந்தது.

அம்மனிதரிடம் ஏதாவது உதவி கேட்கலாம் என நினைத்து நிறுத்துவதற்குள் அம்மோட்டார் சைக்கிள் மின்னல் வேகத்தில் காணாமல் போனது. அவ்வழியே மோட்டார் சைக்கிள் சென்றதற்கான தடயமோ அறிகுறிகளோ தென்படவில்லை. கண்ணுக்கெட்டிய தூரம் வரை எந்த வாகனத்தையும் காணவில்லை.

இருவரையும் பயம் சூழ்ந்து கொள்ள சுற்றும் முற்றும் பார்த்தனர். ஒருவரையும் காணவில்லை.

உடனே இருவரும் மோட்டார் சைக்கிளில் ஏறி வண்டியை ஸ்டார்ட் செய்ய முதலில் ஸ்டார்ட் ஆகவில்லை. நான்கு மிதிகளுக்குப் பிறகு வண்டி ஸ்டார்ட் ஆனது.

இருவரும் சிட்டாய் பறந்தனர்.

சிறிது தூரம் சென்றதும் மீண்டும் ஒரு உருவம் மோட்டார் சைக்கிளுடன் நடு வீதியில் நின்றது. அவ்வரை விலகச் செய்ய ஹாரனை அழுத்த அந்த உருவமோ அசையாமல் அங்கேயே நின்றது.

வண்டியிலும் பிரேக் பிடிக்க முடியவில்லை. பெரும் பிரயத்தனத்தின் பின் அந்த உருவத்திற்கு மிக அருகில் வண்டி கிறீச்சிட்டு நின்றது. இருவரும் நிம்மதிப் பெருமூச்சுவிட்ட அந்த கணத்தில் மீண்டும் அந்த உருவம் காணாமல் போனது.

சுற்றும் முற்றும் பார்க்க அப்படியொரு உருவத்தை எங்கும் காணவில்லை. பயத்தில் இதயம் ஒரு நிமிடம் நின்று துடித்தது. இனியும் இவ்விடத்தில் தாமதித்து நிற்பதில் அர்த்தமில்லை என உணர்ந்த இருவரும் வண்டியை வேகமாகச் செலுத்தி கொழும்பை சென்றடைந்தனர்.

பரீட்சை முடிந்து வீடு வந்தவர்களுக்கு அந்த சம்பவத்தை மறக்க முடியவில்லை. பகலிலும் அந்த ஞாபகம் வந்து வந்து போகின்றது. ரம்பொடையை நினைத்தாலே அந்த உருவம் தான் கண்முன் நின்றது. இது பற்றி தனது நண்பர்களிடம் கேட்டனர்.

யாரோ மோட்டார் சைக்கிள் விபத்தில் உயிரிழந்த ஒருவரின் ஆவி அந்த இடத்தை சுற்றுவதாகவும். இரவு நேரங்களில் அந்த இடத்தில் உலவுவதாகவும் தெரிவித்தனர்.

அன்றிலிருந்து அந்த இடத்தைப் பற்றி நினைப்பதும் இல்லை. அவ்வழியில் போவதும் இல்லை.

உண்மையில் ஆவி இருக்கிறதோ இல்லையோ என்பது எனக்கும் புரியாத புதிராகவே இருக்கின்றது. இருப்பினும் அவ்வப்போது சிலர் இப்படியான சம்பவங்களை அனுபவிக்கத்தான் செய்கிறார்கள். இவற்றை பார்க்கும் போது சில நேரத்தில் ஆவி இருப்பது உண்மையோ என எண்ணத்தோன்றுகிறது.

தகவல் தொகுப்பு
அபி



## திகில் அனுபவங்களை பகிர்ந்து கொள்ளுங்கள்

பேய் இருப்பது உண்மையா? பொய்யா என்ற விவாதங்கள் ஒரு புறமிருக்க பேய் என்ற பெயரைக் கேட்டதுமே பலருக்கு கிலி பிடித்துவிடும். நள்ளிரவு, தனிமை போன்ற சூழ்நிலைகளில் சும்மா ஒரு கயிற்றுத்துண்டைக் கூட பேய் என நினைத்து அலறிவிடுவார்கள். நீங்கள் அல்லது உங்கள் நண்பர்கள் சந்தித்த பேய் பற்றிய அனுபவம் உள்ளதா? அதை எமது வாசகர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

எமது முகவரி
உதயசூரியன் திகில் அனுபவங்கள்
தினக்குரல் இல-68, எலிஹவுஸ் வீதி,
கொழும்பு 15.





மேக்கப் இல்லாத பிரியங்காஷோப்ரா






நாகார்ஜுன, அனுஷ்கா

## இதெப்படி இருக்கு














தம்பி தங்கையுடன் சிம்பு



மனைவி குழந்தைகளுடன் தனுஷ்

# கலாட்டா





## ஆல்பம்

எப்படி இருந்தவங்க இப்படி ஆயிட்டாங்களே என்று நாம் அடிக்கடி சொல்வதுண்டு. ஆம்! காலம் எப்படிப் போகிறது என்பதைப் பார்த்தால் வியப்பாகத்தான் இருக்கிறது. நடிகை ராதிகாவின் ஆல்பம் இங்கே உங்களுக்காக!

இப்பத்திரிகை ஏசியன் மீடியா பப்ளிகேஷன்ஸ் (பிரைவேட்) லிமிடெட்டாரால் (68, எலிஹவுஸ் ரோட், கொழும்பு 15) 25.04.2013 வியாழன் 94, பரமானந்த மாவத்தை கொழும்பு-13 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.